# செந்தமிழ்க் கட்டுரை

5 - MAY 1957
MAD

ஆசிரியர்
வித்துவான் இராஜ. சிவ. சாம்பசிவசர்மா
தமிழாசிரியர்
சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் ஸ்கூல்
சேத்துப்பட்டு, சென்னை-31

ஓரியன்ட் பப்ளிஷிங் கம்பெனி
3, கொண்டி செட்டித் தெரு :: சென்னை

காபிரைட்]
[விலை அணா 12

முதற் பதிப்பு—1956

Printed on Double Crown white Printing 24 lb.

எவரெடி அச்சகம், சென்னை-17

CONNEMARA PUBLIC LIBRARY
5 - MAY 1957
MADRAS

# முன்னுரை

இந்நூல் ஏழு கட்டுரைகளைக் கொண்டு திகழ்வது. எளிய இனிய நடையில் அரிய பொருள்களைத் தெளி வாக விளக்குவது இந்நூல். இக்கட்டுரைகளைக் காண் பார் தமிழ மொழியில் அறிந்து கொள்ளத் தக்க செய்தி கள்பலவுள்ளன எனறு தமிழை விரும்பிக் 'கற்பார்கள். தமிழ் மொழியில் கட்டுரை நூல்கள் மிகச் சிலவே. மேனுடடார் கட்டுரை நூல்களைப் பெருக்கி, அவற்றை இலக்கியமாகவே கொண்டு மதிக்கின்றனர். அது அவர் கள் மொழிவளர்ச்சியைக் காட்டிற்று. அவ்வாருன நிலை தமிழ் மொழிக்கு ஏற்பட்டால்தான் 'தமிழ் உரைநடை'க் இலக்கண அமைப்பும், திருத்த முற எழுதவேண்டி நெறியும் ஏற்படும். மற்றும், 'மொழி வளர்ச்சிக்'குள கட்டுரை எழுதல் இன்றியமையாத கருவியாக அமையும். மொழியும் வளம் பெறும். இக் குறிக்கோள் களை மனத்துட்கொண்டு, தமிழ் மாணவர் நலத்தினை நாடி அறிந்து எழுதப்பட்டது இச்சிறு நூல்.

ஆசிரியன்

CONNEMARA PUBLIC L...
5 MAY 1957
MADRAS

# பொருளடக்கம்


1. அவ்வை தந்த குழந்தைச் செல்வம்
2. பழமையும் புதுமையும்
3. பிறமதத்தார் தமிழ்த் தொண்டு
4. போற்றத் தகுந்த கிழவிகள்
5. தமிழர் வீரம்
6. தமிழகக் கோயில்கள்
7. தமிழகப் பெண்கள்

...MARA PUBLIC LIBRARY
5 - MAY 1957
MADRAS

# 1. அவ்வை தந்த குழந்தைச் செல்வம்

குழந்தைகளின் செல்வமாக நூல்கள் படிப்படியே உயர்ந்து விளங்குவன நம் தாய் மொழியாகிய தமிழில் பல வுள்ளன. பெருநூல்களை அறிவு முதிர்ந்தார்க்கு அளித்த பெரும்புலவர்கள் ல்லோர் உண்டு. பகபிலர், பரணர், நக்கீரர் முதலான சங்கப் புலவர்களும், திருத்தக்க தேவர், தோலா மொழித்தேவர், இளங்கோவடிகள், சீத்தலைச்சாத்த ஞர், கம்பர், சேக்கிழார், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் முத லான பலரும் உள்ளனர். அவ்வையார் என்பார் குழந்தை களுக்கு என அரிய நூல்களை இயற்றியுள்ளார். அவ்வை யாரைப்போல் ஒரு சிலர் சிறுவர் சிறுமியர்களுக்கும் நூல்களை ஒரு சிலவே இயற்றியுள்ளனர்.

'அவ்வையார்' என்ற சொல்லை அறியாதார் உளரோ? கற்றவர் கல்லாதவர் யாவரும் அவ்வையாரை நன்கு அறிவர் கல்லாதவரும் ஏதேனும் ஒரு வாக்கியத்தைச் சொல்லி அவ்வையார் கூறியது என்பர். எனவே, அவ்வையார் கூறி விட்டால் அது ஏற்றுக்கொள்ளத்தக்கது என்பதாயிற்று. 'அவ்வை வாக்கு' என்றால் தமிழ் நாட்டில் யாவருக்கும் பெருமதிப்பு உண்டு. அவ்வை என்ற சொல் முதுமை வாய்ந்த பெண்களுக்குரிய பொதுப் பெயர். இச் சொல் தெலுங்கில் 'அவ்வ' என்றும், கன்னடத்தில் 'அவ்வெ' என்

றும், தாய், பாட்டி, அன்பு என்னும் பொருள்களைக் குறிக்க வருகின்றது. அம்மொழிகளில் இச்சொல் எழுதப்படும் முறையைக் காணின் தமிழிலும் ‘அவ்வை’ என்றுதான் எழுதப்படல் வேண்டும். ஆனல் ‘ஔவை’ என்றும் தமிழில் எழுதப்பட்டு வழங்குகிறது. ‘ஔ’ என்பதற்கு ‘அவ்’ போலியாக வரும். ஆனல் இங்கு ‘அவ்’ என்பதற்கு ‘ஔ’ போலியாயிற்று போலும்! அவ்வை என்ற சொல் அன்னை என்ற பொருளில் திருக்கோவையாரிலும் கந்த புராணத்திலும் வந்துள்ளது.

‘அவ்வையார்’ என்று அழைக்கப்படுவோர் தமிழ் நூல்களில் காணப்படுவோர் மூவர் ஆதல் வேண்டும். ஒருவர் கடைச்சங்க காலத்து அவ்வையார். அவர் காலம் கி. பி. முதல் இரண்டு நூற்றுண்டு ஆகலாம். அவர் செய்யுட்கள் புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை என்னும் நூல்களில் காணப்படுகின்றன. இரண்டாவதாகக் கருதப்படும் அவ்வையார் சேரமான் பெருமாள் நாயனரும், சுந்தரமூர்த்தி நாயனரும் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும். இரண்டாம் அவ்வையார் காலம் கி. பி. பதினென்று ப்ன்னிரண்டாம் நூற்றுண்டு: ஆகலாம். மூன்ருவது அவ்வையார் கம்பர், ஒட்டக் கூத்தர், புகழேந்தி என்பார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவராவர்.

அவ்வையாரைப்பற்றி வழங்குங் கதைகள் பற்பல. அவற்றையெல்லாம் ஒரே அவ்வையாருக்கு ஏற்றிக் கூறுவர். அவ்வையார் மூவரில் கடைச்சங்க காலத்தில் வாழ்ந்தவர் அதியமான் நெடுமான் அஞ்சி அளித்த அருமையான கருநெல்லிக் கனியை உண்டு நீண்டகாலம் வாழ்ந்தனர் என்னும் காரணத்தாற் போலும்! அவ்வாறு கூறுமிடத்து கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த அவ்வையார் பன்னிரண்டாம் நூற்றுண்டு வரை—ஆயிரம் ஆண்டுகள்—வாழ்ந்தவராதல் வேண்டும். திருமூலர் மூவாயிரம்

ஆண்டுகள் வாழ்ந்தனர் என்பாரும் உண்டன்றே! ஆயினும், வரலாற்று அறிஞர் இக்கூற்றினை எவ்வகையாலும் ஒப்புக்கொள்ளார் என்பது ஒருதலை.

இனி, அவ்வையாரைப்பற்றி வழங்கும் கதைகளை அறிவோம். அவ்வையாரைப்பற்றிய கதைகள் பற்பலவாக இருக்கின்றன. அவையாவும் மூன்றும் அவ்வையாரைக் குறித்தன வாதல் வேண்டுமன்றிச் சங்ககாலத்து அவ்வையாரைக் குறித்தன வாகா என்பதும் உணரலாம். இரண்டாவது அவ்வையாரைப்பற்றிய கதை ஒன்றே என்பதும், அதுவும் சேரமான் பெருமாணுயனுரும், சுந்தரரும் குதிரைமீதும், வெள்ளையானைமீதும் சென்றுராக, பிள்ளையார் பூசை செய்து கொண்டிருந்த அவ்வையார் தாமும் செல்ல, விரைந்து பூசை புரிந்தனர். "வழக்கம்போல் நிதானமாகவே பூசை புரிக," என்று ஆணை கிடைத்தது. அவ்வையாரும் நிதானமாகப் பூசை புரிந்தனர். பின்னர்ப் பிள்ளையார் தம் துதிக்கையால் அவ்வையாரைத் தூக்கிக் கயிலாயத்தில் சேர்த்தார். அவ்வையார் சென்றடைந்த பின்னரே, சுந்தரரும் சேரமான் பெருமாணுயனுரும் வந்தடைந்தனர் என்பது.

சங்க காலத்து அவ்வையார் ஒரு விறலி. அதனைத் தாமே புறநானூற்றில் (89) கூறியுள்ளார். சங்க காலத்து அவ்வையார் அதியமானிடத்துப் பெருநட்புப் பூண்டவர். அவர் மூவேந்தர் அவைகளுக்கும் சென்று போற்றுதல் பெற்றவர் ஆவர். அவ்வையார், அதியமானை, அவன் பொருது புண்பட்டு நின்றபொழுதும் (புறம் 93), திருக்கோவலூரை எறிந்தவிடத்தும் (புறம் 99) அவனுக்குச் சிறந்த மகன் பிறந்த காலை மகனைக் கண்டபொழுதும் பகைவர்மீது கொண்ட சினத்தால் கண் சிவப்பு மாறுதிருந்த தன்மையையும் (புறம் 100) அவன் பரிசில்

கொடுக்க நீட்டித்த விடத்தும் (புறம் 206) அவன் பொருது வீழ்ந்த இடத்தும் (புறம் 231, 232, 235) பாடியுள்ளார். வேட்டை வினைமேற் சென்ற அதியமான் கிடைத்தற்கரியதும், உண்டால் நீண்ட கால வாழ்வைத் தரக்கூடியதுமான கருநெல்லிக் கனி ஒன்றைப் பெற்ற காலத்தில் அதனைத் தானுண்ண விரும்பாது அவ்வையார்க் கீந்து அழியாப் புகழ் எய்தினன். அக்கருநெல்லிக்கனியின் அருமையை உண்டபின் அதியமானல் சொல்லக் கேட்டு, அவனை,

*" பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற் றொருவன்போல*
*மன்னுக பெரும நீயே,"*

என்று வாயார வாழ்த்தியுள்ளார். அதியமான்மீது போர் தொடுக்கும் நோக்கோடு இருந்த தொண்டைமானைத் தெருட்டுதற்குத் தூதாகச் சென்ற அவ்வையார், தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலைக் கண்டு, " இவை தாம், பீலி அணியப்பட்டு, மாலை சூட்டப்பட்டு, உடலிடம் திரண்ட காம்பு அழகுபடச் செய்யப்பட்டு, நெய்யிடப் பட்டுக் காவலையுடைய அகன்ற கோயிலிடத்தன," என்று தொண்டைமானைப் புகழ்வதுபோலப் பழித்தும்; அதியமானுடைய படைக்கலங்களாகிய அவைதாம் பகைவரைக் குத்துதலாற் கங்கும் நுனியும் முரிந்து, கொல்லனது பணிக்களரியாகிய குறிய கொட்டிலினிடத்தன வாயின எந்நாளும்," எனப் பழிப்பதுபோலப் புகழ்ந்தும் கூறியுள்ளார். புலமை மட்டுமன்றி அரசியல் தூதராகச் செல்லத்தக்க நுண்ணறிவும், சொல்வன்மையும், தந்திரமும், திறமும் வாய்ந்தவர் சங்ககாலத்து விளங்கிய அவ்வையார் என்பது இனிது விளங்கும். சேரமான் மாரி வெண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெரு வழுதியும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் ஒருங்கிருந்தாரை நோக்கிய அவ்வையார்,

“தமிழக வேந்தர்களே, நிலவுலகம் வேந்தர்க்கு உரியது. ஆயினும், அவ்வேந்தர் இறந்துபோங்கால் உலகமும் உடன்போவது இல்லை. அரசியல் பேற்றிற்குரிய தவவலிமையுடையார் ஆயின் வேற்று நாட்டவராயினும் அவர்க்கு உரியதாகிவிடும். ஆதலால் அரசியலை அறநெறியில் செலுத்திச் செல்வத்தைத் திரட்டி, இரவலர்க்கு வழங்கி, உங்கள் வாழ்நாள் முழுவதும் இன்பமுற வாழ்வீராக. உங்களை வாழும்படி செய்த நல்வினைதான் உங்கள் இறுதிக்காலத்திற்குத் துணையாகும். ஆதலின் அந் நல்வினையையே செய்வீராக. யான் அறிந்தது இவ்வளவே. நீங்கள் வானில் தோன்றும் மீனினும்,மழைத்துளியினும் பலகாலம் வாழ்வீர்களாக,” என்னும் கருத்து அமைத்துப் பாடிய பாடல் (புறம் 367) அவ்வையாரின் ஆழ்ந்து நுணுகி ஆய்ந்தெடுத்த கருத்தினுல் புலமையையும் பெருமையையும் நன்கு புலப்படுத்துவதாகும். இச்செய்யுள், தமிழகத்து முடிவேந்தர் மூவரும் தம்முள் ஒற்றுமை நீத்து வேற்றுமை யுற்றுப் பகைமையாற் பொருது கெடுவார்களாஞல் வேற்று நாட்டவர் தமிழகத்துள் புகுந்து தமிழகத்தைக் கைப்பற்றித் தமிழின் பண்பாடு, செல்வம், கலை, நாகரிகம், சமயம், மொழி, ஒழுக்கம் என்பவற்றைச் சிதைத்துக் கெடுத்துவிடுவர் என்பதைத் தமிழ்ப் புலமை சான்ற பெருமக்கள் அறிந்து அரசர்கட்கு அறிவுறுத்தியிருந்தனர் என்பதும் உணரலாம். சான்றோர் அறிவுறுத்தியவாறு ஒருமை மனத்தினராய்த் தமிழக மூவேந்தரும் வாழாமையாலன்றோ வடவர், களப்பிரர், வடுகர், மோரியர், பல்லவர், துருக்கர், வெள்ளையர் என்பார் தமிழகத்தைப்பற்றி ஆண்டனர்!

இனி, மூன்றும் அவ்வையாரைப்பற்றி அறிவோம். மூன்றும் அவ்வையாரைப்பற்றிய கதைகளே பலப்பல. அவை யாவும் உண்மையெனக் கொள்ளுதலும் இயலாதனவே. எனினும் அவற்றை அறிவதில் குறையொன்றும்

இல்லை. அவ்வையார் பாடியனவாகத் தனிப் பாடல்கள் பல உள்ளன. அவை யாவும் எவ்வெக்காலத்தில் எவ்வெச் சந்தர்ப்பங்களில் பாடப்பட்டன என்பதை ஆய்ந்தால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் சிறு கதையாக விளங்கும்.

கண்டசுத்தி என்பது ஓர் அற்புத ஆற்றல். ஒருவர் மனத்தில் நினைத்திருப்பதை அறிந்து பாடுதல். பாண்டியன் ஒருவன் தன் மனைவியோடு அரண்மனை மேல்தளத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது ஒரு சிறந்த நறுமணம் வீச அம் மணம் தென்றல் கொணர்ந்ததோ அல்லது மனைவி கூந்தலின் மணமோ என்று ஐயுற்றுப் பின் தன் மனைவி' கூந்தலின் மணமே எனத் தெளிந்து, மனத்தில் அமைத்துக் கொண்டு, அதனை அறிந்து பாடுவோர் பொற்கிழி அறுத்துச் செல்லலாம் என்று பறை யறைவித்து, ஒரு பொற்கிழியைச் சங்க மண்டபத்தில் தொங்கவிட்டான். அதனை அறிந்து பாடிப் பொற்கிழியைப் பெறுதற்குச் சங்கப் புலவர்களால் இயலவில்லை. சோமசுந்தரக் கடவுளுக்குத் தொண்டு செய்யும் தருமி என்பான் வேண்டிக்கொண்டபடி இறைவன் "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்று ஒரு பாடலை எழுதிக் கொடுக்கத் தருமி அச் செய்யுளைப் பாண்டியனிடம் காட்ட, அதில் தன் கருத்து அமைந்திருக்கக் கண்டு பொற்கிழியை அறுத்துச் செல்லுமாறு கட்டளை இட்டனன்; தருமி பொற்கிழி பெற்றான். இது திருவிளையாடற் புராணக் கதை. இதனைப்போல அவ்வையார் கருத்தறிந்து பாடிய கதை ஒன்று உள்ளது. அது வருமாறு :–

சோழன் தன் நகர்க்கருகிலுள்ள சோலையில் உலாவிக் கொண்டிருந்தான். ஆங்கு, ஓர் ஆலமரத்தடியில் நத்தை ஒன்று அண்ணாந்த வாயுடன் ஆலமரத்தை நோக்கிக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்குள் ஒரு துளி தேன் சொட்டியது. அத்துளி நத்தையின் வாயில் விழுந்தது. விழுந்த வேகத்தால் நத்தை அப்பால் தள்ளப்பட்டது. மீண்டும் நத்தை

அவ்விடத்திற்கே வந்து முன்போல இருந்தது. மீண்டும் ஒரு துளி விழுந்தது. அதனை உண்டு நத்தை அகன்றது. இந்த அதிசயத்தை மனத்தில் அமைத்துக்கொண்டான் சோழன்.

தன் மனக்கருத்தைப் புலவர்களில் எவரேனும் அறிந்து பாடவல்லரோ என்று அறிய விரும்பினான் சோழன். மறுநாள் புலவர்கள் வழக்கம்போல் அரசவைக்கு வந்தனர். அவர்களை வரவேற்று அமரும்படி கூறினான் சோழன். வேறொன்றும் பேசவில்லை. அரசவையில் இருந்த ஆசனங்களில் எல்லாம் புலவர்கள் அமர்ந்தனர். அவ்வையார் வந்தார். சோழன் வரவேற்று அமரும்படி கூறினான். ஆனால் அமர்தற்கு இடம் இல்லை. அப்பொழுது அவ்வையார்,

காணுந்தே னெந்தேன் கடுகி வழிநடந்தேன்
யான் வந்த தூரம் எளிதன்று—கூனன்
கருந்தேனுக் கண்ணுந்த காவிரிசூழ் நாடா
இருந் தேனுக் கெங்கே இடம்?"

என்று பாடினார். கூனன் — நத்தை. அரசன் தன் கருத்தை அறிந்து பாடிய அவ்வையாரை மகிழ்ந்து தக்க தவிசிட்டு உபசரித்தான்.

ஓரூரில் குறவன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இரு மனைவியர் இருந்தனர். அவ்விருவருக்குள்ளும் எப்பொழுதும் சண்டை நடந்துகொண்டே இருக்கும். குறவனுக்கு அவர்கள் சண்டையைத் தீர்ப்பதே பெரு வேலையாயிற்று. அவன் மிகவும் விருப்பமாக ஒரு பலாமரத்தை வளர்த்துவந்தான். ஒருநாள் அவன் வெளியூரிற்குச் செல்ல நேரிட்டது. அப்பொழுது இளையவள் கணவன் அன்பாய் வளர்த்த பலா மரத்தை வெட்டினாள். அப் பழியை மூத்தவள் மீது சுமத்த எண்ணினாள். அதனை அறிந்த மூத்தவள் பெருங் கவலையோடு இருந்தாள். அச்சமயம் அவ்வையார்

அங்கு வந்தார். அம் மூதாட்டியைக் கண்ட குறத்தி வழிபடு தெய்வம் கண்முன் கண்டாற்போல் மகிழ்ந்தாள். குறத்தியின் முகம் அவள் கொண்டிருந்த கவலையை வெளிப்படுத்திக் காட்டியது. அவ்வையார் குறத்தியை நோக்கி அவள் மனத் துன்பத்திற்குக் காரணம் என்ன என்று கேட்டாள். குறத்தி, இளையவள் செய்த வஞ்சகச் செயலைச் சொன்னாள், உடனே அவ்வையார்,

> "கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
> ஓரிலையாய்க் கொம்பாய் உயர்மரமாய்ச்—சீரியதோர்
> வண்டுபோற் கொட்டையாய் வண்காயாய்த் தின்பழமாய்ப்
> பண்டுபோற் நிற்கப் பணி."

என்று ஒரு செய்யுளைக் கூறினாள். குறத்தி மிக மகிழ்ந்து மூன்று உழக்கு தினை தந்தாள். அத்தினையை முடிந்து கொண்டு அவ்வையார் தம் வழியே சென்றார். இளையவளோ அச்சங்கொண்டு அடங்கிவிட்டாள்.

அவ்வையார் சோழனுடைய சபைக்கு வந்தார். அவர் கையில் தினையை முடிந்த சிறு மூட்டை இருந்தது. அம் மூட்டையைக் கண்ட சோழன் அஃதியாதெனக் கேட்டான். அவ்வையார், தாம் பலா தழைக்கப் பாடிய செயலைக் கூறி,

> "கூழைப் பலாதழைக்கப் பாடக் குறமகளும
> மூவுழக்கா ழாக்குத் தினைதந்தாள்—சோழகேள்
> உப்புக்கும் பாடிப் புளிக்கு மொரு கவிதை
> ஒப்பிக்கும் என்ற னுளம்."

என்று கூறினார்.

அம்பில் என்னும் ஊரில் சிலம்பி என்பாளிடம் ஒருமுறை கம்பர் ஐந்நூறு பொன்பெற்று அரைப்பாட்டுப் பாடிவிட்டுச் செல்ல, அவ் வீட்டிற்கு அவ்வையார் வந்தபொழுது, வறுமையுற்றிருந்த அவ் வீட்டார் அவ்வையாருக்குக் கூழ் இட்டனர்.

அதனை அருந்தியபின் அவ்வையார் அவர்கள் நிலையை அறிந்துகொண்டு,

" தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பிற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்று கீழிரண்டடிகளைப் பாடிக்கொடுத்து வறுமையைப் போக்கிய செய்தியும் இங்கு உணரத்தக்கது. இச் செயல் அவ்வையார் மக்கள் யாவரையும் சமமாகவே நோக்கினர் என்பதையும் யாவரிடத்தும் எளிமையானவராக நடந்து கொண்டார் என்பதையும் விளக்கும் அன்றோ!

அவ்வையாரைப் பற்றி இன்னும் பற்பல கதைகள் வழக்கில் உள்ளன. முருகன் மாடு மேய்ப்போனாக வந்து நாவல் மரத்தின்மேல் ஏறிப் பழங்களைப் பறித்துத் தின்று கொண்டிருக்கும்பொழுது வழி நடைப்பட்டு வந்த அவ்வை யாரை நோக்கிச், 'சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?' என்று கேட்டு, அவர் 'சுடாத பழம் போடு' என்று கூற, முருகன் காய்களையும் கனிகளையும் உதிர்க்க' கனிகளை அவ்வையார் எடுத்து மணல்போக ஊதிய பொழுது முருகன், "மிகவும் சுடப்போகிறது; பாட்டி நன்றாக ஊதித் தின்னுக" என்று கூறினான். அப்பொழுதுதான் சுட்ட பழம் என்றது மிக்க கனிந்த பழத்தையும் சுடாதபழம் என்றது செங்காயையும் குறித்துக் கூறியதாகும் என உணர்ந்து அவ்வையார் சிறுவனிடமும் கற்கவேண்டிய துளது என அறிந்தார். அவ்வையார் வழி நடந்தேகுங்கால் சிறு குழந்தைகள் சிலர் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டார். அப்பொழுது அவர் மிக்க பசியோடு இருந்தார். அதனால் அவர் அச் சிறுவர்களைப் பார்த்து, "இன்னும் ஊர் எவ்வளவு தூரம் இருக்கும்? இங்குச் சோறு விக்குமா?" என்று கேட்டார். அப்பொழுது ஒரு சிறுவன், "பாட்டி

சிறுவர்களாகிய நாங்கள் ஊருக்கு மிகத் தூரமான இடத்தில் வந்து விளையாடுவோமா? எங்களைக் கண்டே ஊர் அருகில் உள்ளது என்பதை அறிந்துகொள்ள வேண்டாமா? இங்குச் சோறு தொண்டையிலே விக்கும்,'' என்று பதில் கூறினான். அம்மறுமொழிகளைக் கேட்ட அவ்வையார், சிறுவராயிற்றே என்று 'விற்கும்' என்பதை உலக வழக்குப்படி 'விக்கும்' என்று கேட்டதற்கு நல்ல சூடு கொடுத்தான் சிறுவன். மற்றும், சிந்தித்துணரும் தன்மையில்லை என்பதையும் குறித்துவிட்டான் என்று நினைந்து வெட்கமுற்றார். இக் கதைகளெல்லாம் கற்றவர் கருவங் கொள்ளலாகா தென்பதை விளக்கவந்தன.

வேளாளன் மனைவியைத் திருத்தி வேளாளனுக்குப் புத்தி புகட்டியதாகவும், ஏழைச் சிறுவனுக்குப் பீதாம்பரம் பெற்றுத் தந்ததாகவும், ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்ற இருவரின் தராதரத்தை விளக்கியதாகவும், கம்பரை இகழ்ந்து ஏசி செருக்கடக்கியதாகவும், பேய்கள் சாபம் நீக்கியதாகவும், ஓர் இடைப்பெண்ணிடம் நீலச் சிற்றுடைப் பெற்றதாகவும், கூறப்படும் கதைகள் பலவுள்ளன.

அவ்வையார் வரலாற்றினை ஒழுங்குற அமைக்காமல் மூன்று காலங்களில் விளங்கிய மூன்று அவ்வையாரின் செயல்களும் பின்னிப்பிணைந்து குழறுபடியாகவுள்ளன.

மூன்றாவது அவ்வையாரே குழந்தைச் செல்வக்குவியல் களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்னும் நூல்களைப் பாடித் தந்துள்ளார். அவருடைய தனிப் பாடல்கள் நூற்றுக்கு மேலுள்ளன. இவையே அன்றி அசதிக் கோவை, பந்தனந்தாதி என்னும் நூல்களையும் இயற்றி யுள்ளார். மற்றும், ஞானக் குறள் என்ற ஒரு நூல் அவ்வை யார் பாடியதாக வெளிவந்துள்ளது. அது பெரும்பாலும் இரண்டாவது அவ்வையார் பாடியதாக இருக்கலாமோ

என்று கருதற்கு இடமுண்டு. 'விநாயகர் அகவல்' என்பது ஒன்று அவ்வையார் பாடியதாகவுள்ளது. அது மூன்ருவது அவ்வையார் பாடியதாகலாம்.

மூன்ருவது அவ்வையார் சோழநாட்டினர் என்று கருதலாகும். முதல் அவ்வையார் திருவள்ளுவர் காலத்தவர் என்றும் உடன் பிறந்தவர் என்றும் கூறுவர். அவர்கள் பெற்ருேர் வரலாறு ஒரு தலையாக அறியக் கூடவில்லை. முன் காலத்தில் வரலாறு எழுதிவைக்கும் வழக்கம் இல்லை. நூலின் பொருளிலே மனம் தோய்ந்து நன்மை தீமைகளை ஆய்வதில் நாட்டங்கொண் டிருந்தனரன்றி நூலாசிரியர் வரலாற்றில் மனத்தைச் செலுத்தவில்லை.

சோழநாட்டில் திருத்தருப்பூண்டியைச் சேர்ந்த திருக் கடிக்குளம், திருவிடும்பாவனம் இவற்றின் பக்கத்தில் வளவ ஞற்றங்கரையில் துளசியார் பட்டினம் என்ற ஊர் இருக் கிறது. அங்கு அவ்வையார் கோயில் என்று ஒரு கோயிலும் உள்ளது. அக்கோயில் அவ்வையாரின் திருவுருவம் முதி யவள் வடிவாய் முகம் திரைந்து காணப்படுகிறது. அதனுடன் மற்ருெரு இளம் பெண் வடிவம் உள்ளது. அதனை அங் குள்ளார் 'உப்பை' என்று கூறுகின்றனர். 'அவ்வையார் மானியம்' என்று இக்கோயிலுக்குச் சில நிலங்களும் உரிமைகளும் உள்ளன. அக்கோயிலில் அவ்வையார் சிலை பிரதிட்டை செய்யப்பட்டிருந்த இடத்தில் விசுவலிங்கம் பிரதிட்டிக்கப்பட்டு ஆதிசைவரால் பூசை செய்விக்கப்படு கிறது. அவ்வையார் உருவச்சிலை வேருெரு பக்கத்தில் வைக்கப்பட்டுள்ளது. கோவிலுக்கு வடமேற்கில் அரை கல் தூரத்தில் 'கொல்லன் திடல்' என்று ஒரு மேடு காணப்படுகிறது. அங்கு ஓர் ஆலமரமும் மேடையும் உள்ளது. அங்குச் சென்று அவ்வையாரைத் தியானித்துத் தாம் விரும்புவதை மக்கள் பெறுவர்.

கொல்லன் ஒருவன் அந்த மேட்டில் வீடுகட்டி வாழ்ந்திருந்தானும். மழையால் நனைந்து வந்த அவ்வையார்க்கு ஊரார் ஒருவரும் ஆதரவு அளிக்கவில்லை. அக்கொல்லன் அவ்வையாரை அழைத்துவந்து, உலைக்களத் தீயால் ஆடையைக் காயவைத்து, அவரைக் குளிர்காயச் செய்து, உணவும் அளித்தான். அக்காலத்தில் வெள்ளம் மேலிட்டு ஊரெங்கும் பரவியது. அப்பொழுது அவ்வையார்,

" வள்ளையும் கொள்ளையாகி வளவனும் பேராருகிக்
கொல்லன் திடலொழியக் கொள்ளாய் பெருங்கடலே "

என்று பாடியதால் அக்கொல்லன் திடல் வெள்ளங் கொள்ளாமல் காக்கப்பட்டது என்பர்.

இனிக் குழந்தைச் செல்வமாக அவ்வையார் அளித்துள்ள நூல்களை நோக்குவோம். தமிழ் மொழியிலுள்ள நீதி நூல்களான ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி என்பன இளங் குழந்தைகளுக்காகவே பாடப்பட்டன. அவை மிக்க இளமைப் பருவத்திலேயே நல்ல கருத்துக்களை மனத்தில் பதியச் செய்கின்றன. தீயவற்றை நீக்கி நல்லவற்றைக் கைப்பற்ற, மனத்தில் மறையாது நின்று தூண்டுகின்றன. இரண்டே சொற்களால் அமைந்தது ஆத்திச்சூடி. தமிழ்மொழி நெடுங்கணக்கு முறைப்படி அமைந்துள்ள வாக்கியங்களின் ஆழ்ந்த கருத்துக்கள் விதைகளாகும். அவையே பின்னர்க் குறளாய், நாலடியாய், புராணமாய், காப்பியமாய்த் தளிர்த்துத் தழைத்தன வெனலாம். சிறுவர் எளிதில் மனப்பாடம் செய்யும் வகையில் அமைந்துள்ளதும் நோக்கி இன்புறபாலது. மேனுட்டரும் இந் நான்கு நூல்களும் தமிழ்மொழிக்கு அடிப்படையாக அமைந்துள்ளமை குறித்து வியப்புறுகின்றனர். ஆத்திசூடி என்ற நூல் ஆருவது வயதில் குழந்தை எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டதும் இரண்டாவது வகுப்பில் படிக்கும் பாடம். அவ்வையார் இயற்றிய நூல்கள் நான்கினையும் குழந்தை ஒன்பது

வயதிற்கு மனப்பாடம் செய்கிருன், 'இளமையில் கல்வி சிலேயில் எழுத்து' அல்லவா? அப் பருவத்தில் எவ்வளவு அரிய கருத்துக்களே எளிய நடையில் மனத்தில் பதியவைக்க ஆசிரியர் உழைப்பெடுத்துக் கொண்டார் என்பதை நினேக்குந்தோறும் வியப்பூட்டுகின்றது. நாடும் மொழியும் நலம் பெற மக்கள் நல்லோர்களாக வாழவேண்டு மன்ரே! நல்லோராவது எப்படி? நல்ல உரைகளேக் கற்றலாலும் கேட்டலாலும் அவ்வழிநின்று ஒழுகலாலுமே அன்ரே? 'அறஞ்செய விரும்பு', 'ஆறுவது சினம்', 'தந்தை தாய் பேண்', 'நன்றிமறவேல்', 'இளமையில் கல்', சான்ருேர் இனத்திரு,' 'தீவினே அகற்று,' 'தொன்மை மறவேல்,' 'நன்மை கடைப்பிடி,' 'நூல் பலகல்', 'பழிப்பன பகரேல்'. 'மேன்மக்கள் சொற்கேள்,' 'வித்தை விரும்பு,' 'உத்தமனுய் இரு', முதலான அரிய வாசகங்களேக் கவனித்துப் படித்தால் அவை ஒவ்வொன்றையும் விரித்து எழுதப்புகின் ஒவ்வோர் அரிய பெரிய நூலாகிவிடும். இத்தகைய அரிய குழந்தைச் செல்வத்தை நாடும் மொழியும் நலம்பெற எண்ணியே தம் வாழ்நாள் முழுவதும் சிந்தித்து இயற்றித் தந்தவர் அவ்வையார். கம்பர், சேக்கிழார் என்பாரைப்போல அவ்வையார் பெருங்காவியம் ஒன்றும் செய்யவில்லே என்பதே அதற்குச் சான்று.

# 2. பழமையும் புதுமையும்

உலகில் எதற்கும் வளர்ச்சியே உயிர் எனக் கருதப் படுகிறது. வளர்ச்சி உடையவைதாம் முன்னேற்றப் பாதையில் உள்ளனவாகும். பூமியில் நடப்பட்ட விதை முளைத்து வளர்வதைக் காண்கிறோம். குழந்தைகள் பிறந்து வளர்வதைக் காண்கிறோம். பல் முளைத்து வளர்வதைக் காண்கிறோம். மறைந்த சந்திரன் பிறையாக வளர்ந்து வருவதைக் காண்கின்றோம். எனவே, வளர்ச்சி என்பது எல்லாவற்றிற்கும் உண்டு. வளர்ச்சியே ஆக்கத்திற்கு அறிகுறி. மற்றும் வளர்ச்சியே இன்பமூட்ட வல்லது.

இந்நிலை மொழிக்கும் உண்டல்லவா? மொழியும் தோன்றி வளருந் தன்மையுடையது. மொழி வளருந்தன்மையுடையதா யிருந்தால்தான் அந்த மொழியைப் பேசும் மக்கள் வாழ்க்கை நிலை உயர்ந்து வருகிறது என்று உணர்கிறோம். மொழி வளர்ச்சி குன்றியிருக்குமாயின் நாட்டு மக்களும் வாழ்க்கையில் வளர்ச்சி குன்றியுள்ளார்கள் என்பதை உணரலாம். மொழியின் வளர்ச்சி அந்நாட்டு மக்களின் வாழ்க்கையின் வளர்ச்சியையும் நாகரிக வளர்ச்சியையும் காட்டுகிறதாகும். மொழி வளர்ச்சியை நோக்கும் பொழுது அது மக்களின் சூழ்நிலைக்கும், காலத்திற்கும் அறிவுக்கும் ஏற்பக் காலத்திற்குக் காலம் வேறுபாடுகள் பலவற்றைப் பெற்று வளரும். அவ்வாறு அமையும்பொழுது நல்லறிவுடைய மக்கள் பழமை புதுமை என்பவற்றுள் நல்லனகொண்டு, தீயனவகற்றி மேற்கொள்ளல் கடமையாகும்.

இங்கு இனித் தமிழ் மொழியின் வளர்ச்சியைப்பற்றி ஒரு சிறிது காண்போம். இன்று நமக்குக் கிடைத்துள்ள பழ

மையான நூல்களில் தலைமை வாய்ந்தது தொல்காப்பியம் ஒன்றேயாம். தமிழ் நூல்களில் பழமையானவற்றிற்குச் சிறந்த உரையாசிரியர்களால் எழுதப்பட்ட உரைகள் யாவும் கூர்ந்து நோக்குமிடத்துப் பத்தாம் நூற்றாண்டிற்குப் பின் எழுந்தவைகளேயாம். எனவே, உரை ஆசிரியர்களை விடுத்து நூற்களை மட்டும் இங்கு எடுத்துக் கொள்வோம். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பற்பல நூல்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும் என்பது அந்நூலில் **'என்ப', 'என்மனார்' 'எனமொழிமனார்'** என்பவற்றாலும் பாயிரத்தில் பனம்பாரனார், "முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்தோன்" என்பவற்றாலும் உணர லாகும். ஆனால் தொல்காப்பியத்திற்கு முற்பட்டதாகிய நூல் எதுவுமே கிடைக்கவில்லை. ஆனால் செம்மையான தாகவும், முற்ற முடிந்ததாகவும் அமைந்துள்ள தொல்காப்பி யத்தை நோக்கும்பொழுது தொல்காப்பியம் தோன்றுதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தமிழ்மொழி திருந்திய மொழியாய்ச் செம்மைசான்ற இலக்கியங்களைப் பெற்றதாய் விளங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகாதிராது. தொல்காப்பியத்தின் காலம் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆகலாம். ஐயாயிரம் ஆண்டு களுக்கு முன்னர் தோன்றியது தொல்காப்பியம் என்பாரும் உண்டு.

தொல்காப்பியம் நீங்க, பழைய நூல்களாகக் கிடைத் துள்ளனவற்றை இக்காலத்தார் 'சங்கத்தொகை நூற்கள்' என்று வழங்குகின்றனர். அவை எட்டுத்தொகையும் பத் துப்பாட்டும் ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகை, பிற்காலத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனபோல ஒருவரால் தொகுக்கப் பட்டதாதல் வேண் டும். எட்டுத்தொகை நூல்கள் என்பன:—நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்

தொகை, அகநானூறு, புறநானூறு, பத்துப் பாட்டென்பன:—
திருமுருகாற்றுப்படை, பொருநாற்றுப் படை, சிறுபாணாற் றுப்படை, பெரும் பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மது ரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப் பாலை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை).

மேற்கூறிய இரு தொகைகளிலும் உள்ள நூற்கள் பதி னெட்டாகும். எட்டுத் தொகையிலுள்ள எட்டு நூல் களையும் அகம், புறம் என்ற இரண்டு வகையால் பிரித்துக் காணுமிடத்து, அகத்தைச் சார்ந்தனவாக நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு என் பனவும், புறத்தை சார்ந்தனவாகப் பரிபாடல், பதிற்றுப் பத்து, புறநானூறு என்பனவும் அடங்கும். இவ்வெட்டுத் தொகை நூல்களுள் ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பனவே வந்துள்ளன. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றுன புறநானூற்றில் ஒரு சில பாக்கள் காலத்தால் முந் தியனவாகவும் உள்ளன.

அவற்றைக்கொண்டு ஆயுமிடத்துத் தமிழின் தொன்மை மிகவும் தெளிவாக விளங்கும். புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனைப் பாடியுள்ளார். அவர்,

"போற்றூர்ப் பொறுத்தலும் சூழ்ச்சிய தகலமும்
வலியும் தெறலு மளியு முடையோய்!
நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந!
வான வரம்பனை நீயோ பெரும!
அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!

*பாறுல் புளிப்பினும் பகலிரு ளினும்*
*நாஅல் வேதம் நெறி திரியினும்*
*திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி*
*நடுக்கின்றி நிலீயரோ ”*

என்று செவியறிவுறுத்தி வாழ்த்துகின்ருர்.

‘பகைவர் பிழை செய்தால் அப்பிழையைப் பொறுத்தலும், அப்பிழை பொறுக்குமளவு வல்லவாயின் அவரை அழித்தற்கு உசாவும் உசாவினது அகலமும், அவரை அழித்தற்கேற்ற மனவலியும், சதுரங்கவலியும், அவ் வாற்ருல் அவரை அழித்தலும்,அவர் வழிபட்டால் அவர்க்குச் செய்யும் அருளும் உடையோய்! நினது கடற்கண் தோன்றிய ஞாயிறு பின்னும் நினது வெளிய தலைபொருந்திய திரையை உடைய மேற் கடற்கண்ணே மூழ்கும் புதுவருவாய் இடையருத ஊர்களை யுடைய நல்ல நாட்டிற்கு வேந்தே! வானவரம்ப! பெரும! நீ, அசைந்த தலையாட்டம் அணிந்த குதிரையை உடைய பாண்டவர் ஐவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட பொற்பூந்தும் பையை யுடைய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ் சோருகிய மிக்க உணவை இரு படைக்கும் வரையாது வழங்கினேய்! பால் தன் இனிமை ஒழிந்து புளிப்பினும், ஞாயிறு தன் விளக்க மொழிந்து இருளினும் நான்கு வேதத்தினது ஒழுக்கம் வேறுபடினும், வேறுபாடில்லாத சூழ்ச்சியை உடைய மந்திரச் சுற்றத்தோடு ஒழியாது நெடுங்காலம் விளங்கித் துளக்கமின்றி நிற்பாயாக!’ என்பது மேற்கண்ட பகுதிக்குக் காட்டும் பழையவுரை.

இதில் ‘நீ நடுக்கின்றி நிலீ இயர்’ என்று முன்னிலையிடத்தில் கூறப்பட்டுள்ளது. இதனுல் பாரதப்போர் நிகழ்ந்த காலத்துச் சேரமான் உதியஞ் சேரலாதன் இருந்தான் என்பதும், அக்காலத்தே முரஞ்சியூர் முடிநாகராயரும் வாழ்ந்தவராதல் வேண்டும் என்பதும், சேரலாதனை முடிநாகராயர்

நேரில் கண்டு பாடினூர் என்பதும் இனிது விளங்கும். இராமாயண காலத்திலேயே தமிழகம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதென்பது இராமாயணத்தில் கூறப்பட்டுள் ளது. ஆனுல் அக்காலத்தியதாகக் கருதக்கூடிய செய்யுள் ஒன்றும் நமக்குக் கிட்டியது. கிடைத்திருக்கும் தமிழ்ச்செய் யுட்களுள் மிகப் பழைமையான பாட்டாகக் கருதப்படுவது முரஞ்சியூர் முடிநாகராயர் பாட்டு. இச்செய்யுள் ஆசிரியப் பாவால் அமைந்தது. எட்டுத் தொகை நூல்களுள் பயின் றனவாக வந்துள்ளவை நால்வகைப் பாக்களும், தாழிசை களுமேயாம்.

எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்ற தொகை நூல் களில் செய்யுட்களின் நடையைப்பற்றியும் நன்கறிதல்வேண் டும். நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல், பதிற்றுப்பத்து என்பன ஒருவகை நடை வாய்ந் தன. ஐங்குறு நூற்றின் செய்யுள் நடை மற்றத்தொகை நூல் களின் செய்யுள் நடையினும் எளிதானதே. கலித்தொகை யின் நடை மேற்குறித்த நூல்களின் நடையைக் காட்டிலும் சற்று வேறு பட்டதாகவும் சிறிது மெருகிடப்பட்டதாகவும் காணப்படும். பத்துப்பாட்டின் உள்ள செய்யுட்களின் நடை எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை முதலானவற்றின் நடையையே ஒத்துள்ளது. எனவே, கடைச்சங்கப் புலவர் காலத்தனவாகக் கண்டு தொகுக்கப்பட்ட தொகை நூல் கள் பெரும்பாலும் ஒத்த நடையுடையனவாய், செய்யுட்க ளமைப்பதிலும் ஒரே முறையைக்கொண்டு விளங்கு வன வாய் உள்ளன. இயற்கையை உள்ளபடியே எடுத்துக் கூறும் இயல்பினைக் கொண்டன சங்கச் செய்யுட்கள். அச் செய்யுட்களில் கற்பனைக் கலப்பே கிடையாது. எல்லாம் தன்மை நவிற்சியே. உயர்வுநவிற்சி என்பது எள்ளளவும் இராது. இந்நெறி கி. பி. முதல் நூற்றுண்டு வரையிலும் விளங்கியது என்னலாம்.

கி. பி. முதல் நூற்றாண்டிலிருந்து பௌத்த சமணமதங்கள் தமிழ் நாட்டில் மிகுதியாகப் பரவத்தலைப்பட்டன. இதற்கு முன்னரே பௌத்த சமண மதங்கள் தமிழகத்தில் புகுந்துவிட்டன. எனினும் அவை அடங்கிக்கிடந்தன வன்றிப் பரவத் தலைப்படவில்லை. பௌத்த சமண சமயங்கள் வடமொழியைப் பின்பற்றித் தமிழ் மொழியையும் அணைத்துத் தழுவிக்கொண்டு வாழ வேண்டிய நிலை எய்தின. அதனால் விருத்தங்களும் அவற்றின் பேதங்களும் தோன்றலாயின. சங்க காலத்திய நடையும் நெகிழ்ந்து கொடுத்தது; எனினும் அறவே அகற்றவும் இல்லை. இந்நிலையில் தமிழ் நடையில் சிறிது மாறுதல் ஏற்படலாயிற்று; வடசொற்களும் தமிழில் விரவலாயின. சங்கத் தொகை நூல்களில் வடசொற்களைக் காணல் என்பது மிகவும் அரிது. இளங்கோவடிகளின் சிலப்பதிகாரமும், சீத்தலைச் சாத்தனாரின் மணிமேகலையும் தோன்றலாயின. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பல்வகைப் பாக்களையும் புகுத்தினார். சாத்தனார் மணிமேகலையில் வடமொழிச் சொற்களைப் புகுத்தினார். இருவரும் ஒரே காலத்தில் வாழ்ந்தோர்; ஒருவரை ஒருவர் நெருங்கிப் பழகி உணர்ச்சியை நன்கறிந்தவர்கள். ஆனால் இருவர் எழுதிய நூல்களையும் கையில் கொண்டு நோக்கின் ஒருவர் மற்றவரினும் நடையில் வேறுபட்டிருத்தலை உணரலாகும்.

சங்க காலத்திற்குப் பின் அடுத்துத் தோன்றிய நூல்கள் இந்த இரண்டுமே அன்றி வேறு இல்லை. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின் வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, துறை, தாழிசை, விருத்தம், விருத்த பேதங்கள் என்பன எல்லாம் தமிழ்ச் செய்யுளியற்றும் துறையில் புகுந்தன. வட மொழிக்கலப்பும் மிகுந்து வரலாயின. பௌத்த சமண மதங்களில் பௌத்தம் சிறிது குன்றிச் சமணமதம் பெருகி வளரலாயிற்று. தமிழ்மொழி வளர்ச்சியும் குன்றுந் தன்மையை எய்தியது. இயல், இசை, நாடகம் என்பவற்

றும் இசையும் நாடகமும் அறவே புறக்கணிக்கப்பட்டன. ஏதோ இரண்டொரு நூல்கள் வெளிவந்தன. காரைக்காலம்மையார் பிரபந்தங்கள் இக்காலத்தில் தோன்றியனவாகும். கி. பி. ஐந்தாம் நூற்றுண்டின் இறுதியில் தமிழ் மொழியில் 'களவழி நாற்பது' என்ற நூல் ஒன்றுகும். 'திருவாசகம்' என்ற நூல் கி. பி. மூன்றுண்டினது என்பார் சிலர். ஆனல் அந்நூலில் வந்துள்ள விருத்த பேதங்களை நோக்குங் காலத்தும், அந்நூலாசிரியரான மாணிக்கவாசகர் திருச்சிற்றம்பலக் கோவையார் என்ற நூலையும் இயற்றினர் என்பதாலும், கி. பி. இரண்டாம் நூற்றுண்டு முதல் ஐந்தாம் நூற்றுண்டளவும் அகப்பொருள் துறைகளைக் கோவை பட அமைத்துக் கோவை நூல் இயற்றல் உண்டென்பதற்குச் சான்றுகப் பிறிதொரு கோவை நூல் காணப்படாமையாலும், தேவாரப் புலவர்களான திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் என்பார் செயல்கள் சுட்டப்பட்டிருத்தலாலும், வரகுணனைப்பற்றிக் கூறப்பட்டிருத்தலாலும் திருவாசகம் என்ற நூல் மூன்றும் நான்காம் நூற்றுண்டுகளில் இயற்றப்பட்டதன்று என்பது தெளியலாம். இந்நிலையைக் கவனிக்கும்பொழுது கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் கி. பி. ஆரும் நூற்றுண்டின் முற்பகுதிவரை தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றியிருந்த தென்பதும், அப்பகுதியான காலமே தமிழ்மொழியின் இருண்ட காலம் என்றும் கூறலாம்.

கி. பி. ஆறு ஏழு, எட்டு, ஒன்பதாம் நூற்றுண்டுகளில் சமண பௌத்த சமயங்களின் ஓய்வு தோன்றியது; சைவ வைணவ சமயங்கள் தழைத்தோங்கலாயின. இக்காலத்தில் தமிழ்மொழியும் புத்துயிர்பெற்றுத் தழைக்கத் தொடங்கிற்று. இக்காலத்தைத் தமிழ்காலத்தின் இருள் கழிதற்குரிய புலர் பொழுது என்று கூறலாம். இக்காலத்தில்தான் தேவார திருவாசகங்களும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும், திருக்கோவையார், பாண்டிக்கோவை நந்திக்கலம்பகம் முதலான

நூல்களும், பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பும் நடை பெற்றனவாதல் வேண்டும். பதினெண் கீழ்க்கணக்கில் சில நூல்கள் கடைச்சங்கக் காலத்தன. அவற்றை ஒன்று சேர்த்துத் திரட்டிப் பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகுப்பு ஏற்பட்டதென்க. மற்றும்,

கி. பி. ஐந்தாம் நூற்றுண்டினிடைக் காலம் முதல் ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதி வரையில் தமிழகத்தைப் பல்லவர்கள் என்பார் கைப்பற்றி ஆளத் தொடங்கினர். அவர்கள் சைவத்தையும் வைணவத்தையும் தமிழ் மொழி யையும் தழைக்கச் செய்தனர். அவர்கள் காலத்திற்கு முன் தமிழகத்திலிருந்த கோயில்கள் எல்லாம் மண்ணாலும், செங் கல்லாலும், மரத்தாலுமே கட்டப்பட்டிருந்தன. பல்லவர் களே தமிழகத்தில் கற்கோயில்களையும் குகைக் கோயில் களையும் முதன் முதலாக அமைத்தவர்கள். அப் பல்லவர் களுள் சிறந்தோரான மகேந்திர பல்லவனும் அவன் மகன் நரசிம்மவர்ம பல்லவனுமே கற்கோயில், குகைக்கோயில் எடுக்கும் முயற்சியில் முதல் முதல் தலைப்பட்டனர். பல்ல வர்காலத்தில் சிற்பக்கலை ஓவியக்கலை, இசைக்கலை, நாட கக்கலை முதலான கலைகள் புத்துயிர் பெற்றுத் தழைக்க லாயின. எனவே, அவர்கள் காலம் தமிழ்மொழிக்கும், ஒரு வகையில் தமிழ் நாட்டுக்கும் பொற்காலத்தின் ஆரம்ப காலமாகும் என்னலாம். ஆனல் சோழ, பாண்டியர் என்று கூறப்பட்ட இருவரும் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு வரை யில் பல்லவர்களுக்கு அடங்கிய சிற்றசர்களாகவே வலிமை குன்றியிருந்தனர். பல்லவர் காலத்தில் மாமண்டூர், திருக் கழுக்குன்றம், மகேந்திரவாடி, மாமல்லபுரம், திருசிராமலை, சித்தன்னவாசல், முதலாகப் பல மலைகளிருக்கும் இடங்கள் எல்லாம் சிற்பக்கலைக் கூடங்களாகத் திகழலாயின.

கி, பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றுண் டின் தொடக்கத்திலும் பல்லவர்கட்குக் கீழ் அடங்கி

யிருந்த சோழர் தலையெடுக்கலாயினர். விஜயாலயசோழன் என்பான் மிக முயன்று, கண்ணும் கருத்துமாய்க் காலம் பார்த்திருந்து சோழர் ஆட்சியைக் மீண்டும் உயிர்ப்பித்தான். சோழப் பேரரசு வளர்ந்தோங்குவதாயிற்று. தமிழ் நாட்டிலிருந்த சமணப் புலவர்களும் தமிழ் மொழி வளர்ச்சியில் ஊக்கங்கொண்டனர், சீவகசிந்தாமணி, சூளாமணி, யசோதர காவியம், நீலகேசி, குண்டலகேசி, வளையாபதி, யாப்பருங் கலம், யாப்பருங்கலங் காரிகை, நன்னூல், மண்டல புருடர் நிகண்டு, சூடாமணி நிகண்டு, பிங்கலந்தை நிகண்டு முதலாயின தோன்றின. மற்றொருபுறத்தில் திருமந்திரம், சைவசித்தாந்த சாத்திரங்கள், முதலான நூல்கள் வெளி வரலாயின. சோழப்பேரரசும் இராஜராஜர், இராஜேந்திரர் என்பாரின் கீழ் ஓங்கி வளர்ந்தது, மறைந்திருந்த தேவாரங் களை நம்பியாண்டார் நம்பி என்பாரைக்கொண்டு இராஜ ராஜன் திரு முறைகளாக வகுத்தான். தஞ்சை ராஜ ராஜேச்சரம் தோன்றியது; கருவூர்தேவர் பாடினர். 'ராஜ ராஜன் நாடகம்' தோன்றியது. அவன் மகன் இராஜேந்திரன் கங்கைகொண்ட சோழேச்சரத்தைக் கட்டினன். அதனையும் கருவூர்தேவர் பாடினர். அவர் பாடியன 'திருவிசைப்பா' எனப்பட்டன முதலாங் குலோத்துங்க சோழன், இரண்டாம் குலோத்துங்கன், மூன்றும் குலோத்துங்கன் என்னும் சோழப் பேரரசர்காலத்தெல்லாம் சோழநாடு சிறந்த நிலையில் இருந்தது. கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டு முதல் பதினன் காம் நூற்றுண்டு வரையில் தமிழன் பொற்காலமாகும்.

இச் சோழர்கள் காலத்தில் கல்வெட்டுகளில் செய்யுள் நடையில் மெய்க் கீர்த்திகள் பல தோன்றின.

பெரிய புராணம், மூவருலா, குலோத்துங்க சோழன் கோவை, பிள்ளைத் தமிழ், தக்கயாக பரணி, நளவெண்பா, சங்கர சோழனுலா, தண்டியலங்காரம், கம்ப ராமாயணம் முதலான அரிய நூல்கள் தோன்றின. நச்சினர்க்கினியர்,

பேராசிரியர் பரிமேலழகர், அடியார்க்கு நல்லர், முதலியோர் சங்கத்தொகை நூல்களுக்கும், பின் தோன்றிய நூல்களுக்கும், உரைகள் எழுதலாயினர். பிள்ளைப்பாட்டு, உலாப் பாட்டு, என்பன எல்லாம் பிள்ளைத் தமிழ், உலா எனத் தோன்றலாயின திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி, நோமி நாதம் என்பன சமணர்கள் இயற்றியன. சைவத் திரு முறைகள் பன்னிரண்டாக அமைந்தன. மும்மணிக் கோவை, நான் மணிமாலை, அந்தாதிவகைகள், மாலை முதலான சிறு பிரபந்தங்கள் பல தனி நூல்களாக வெளிவந்தன. திருத்தக்க தேவர் விருத்தங்களால் காப்பியங்கள் எழுதத் தொடங்கினர். கம்பர் விருத்தயாப்பை அழகுற பெருகிட்டுப் பெருங்காப்பியமான இராமாயணத்தை எழுதினர். தமிழில் சிறந்த காப்பியங்களான சீவக சிந்தாமணி, சூளாமணி, கம்ப ராமாயணம், பெரியபுராணம் என்பன எல்லாம் இப் பொற்காலத்தில் தோன்றியன. ஆதலால் இதனைக் காப்பிய காலம் எனினும் குற்றமில்லை. விருத்த பேதங்கள், அணி வகைகள், சந்தங்கள் என்பன வெல்லாம் பெருகித் தமிழ்க் காப்பியங்கள் மனத்தைக் கவர்வனவாயின.

கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டும் பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை, பாரதம், பாகவதம், கந்தபுராணம், திரு விளையாடற்புராணம் முதலான புராணங்கள், பெருகின. புலவர்களும் பெருகினர். குறுநில மன்னர்களும் செல்வர் களும் புலவர்களை ஆதரித்தனர். நாலாயிரத்திவ்வியப் பிர பந்தத்திற்கு அழகான வியாக்கியானம் அமைந்தது. திருப் புகழ் என்னும் அரிய சந்த விருத்த நூல் தோன்றியதும் இக் காலமே. கி. பி. பதினேழாம் நூற்றுண்டு முதல் பத்தொன் பதாம் நூற்றுண்டுவரையில் கலம்பகம், பிள்ளைத் தமிழ், உலா, அந்தாதி வகைகள், மாலை என்னும் பிரபந்த நூல்கள் பெருகின. ஒவ்வொரு தலத்திற்கும் இவ்வகையான பிர பந்தங்கள் ஏற்படலாயின. பிரபுக்கள் மீது பாடப்பட்ட பிர

பந்தங்கள் பல உண்டு. குறவஞ்சி, மடல், பள்ளு, சிந்து, தெம்பாங்கு, காவடிச் சிந்து, கீர்த்தனை முதலியனவும் பெருகின. ஒவ்வொரு தலத்திற்குச் சிந்து, பள்ளு, குறவஞ்சி, என்பன அமைந்தன, புலவர் அந்தாதி பாடுங்கால் யமகம், திரிபு, மடக்கு முதலான சொல்லணிகளை அமைத்துப் பாடல்கள் பாடினர், இதனை ஒரு வகையாகப் பிரபந்த காலம் என்று கூறலாம். இந்தக் காலம் சங்க நூற் பயிற்சி குன்றியிருந்தகாலம் என்று கூறலாம். பத்தொன்பதாம் நூற்றுண்டிற்குள் தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்கர் என்பார் தோன்றி அருட்கவிகளைப் பாடிப் பரமனைப் பரவினர். எவ்வாருயினும் தமிழ் பல்வகையில் சிறப்பாகப் போற்றப்பட்ட காலம் என்பது தெளிவு. புலவர்கள் பிரபந்தங்களைச் சிறப்பாக இயற்றினர் எனினும் கவிபுனை திறன் வளர்ந்தோங்கியிருந்தது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைப் பகுதியிலிருந்து ஆங்கிலக் கல்வியின் பெருக்கத்திஞல் தமிழ்க் கல்வி குன்றுதல் அடைந்தது. தமிழ்மொழியை முறையாகப் பாடம் கேட்பாரும் குறைந்தனர். சங்க நூல்கள் இருந்தவிடமே தெரியாமல் ஓலைச்சுவடிகளாகப் பரண்களில் அமைந்து கிடந்தன. இந் நிலையில் புலவர்களை ஆதரிப்பாரும் குன்றினர், "எடுத்த தேல்லாம் செய்யுளாக இருந்தால் யார் படிப்பது! யமகம், திரிபு-இவை என்ன சொற்கரடி வித்தைகள்? இவற்றை யார் மண்டை உடைத்துக் கொண்டு படிப்பார்?" என்று கூறும் காலம் வந்துவிட்டது. உரை நடையில் தெளிவாக எழுதப்படின் ஏதோ ஓய்வு நேரத்தில் படிக்கலாம் என மக்கள் கூறும் நிலை எய்தியது. ஆறுமுக நாவலர், வேதநாயகம் பிள்ளை முதலியோர் வசன நூல்கள் எழுதினர். ஆங்கிலம் கற்ருல்தான் வயிற்றுப் பிழைப்பு என்றதால் பள்ளிக்கூடங்களில் தமிழ்க் கல்வி குறைந்தது. செய்யுட்களைப் படிப்பதில் யாருக்கும்

விருப்பம் தோன்றவில்லை. இங்கிலையில் தூங்கிக் கிடந்த தமிழ் மக்களைத் தட்டியெழுப்பத் தேசிய கவி சுப்பிரமணிய பாரதியார் தோன்றினர். அவர் பழைய தமிழ் யாப்பினுள் அமைந்த விருத்தங்களையும், விருத்த பேதங்களையும், சிந்து, கொம்மைப்பாடல், முதலிய சந்தப்பாடல்களை மிக எளிய நடையில் பாடி மக்களுக்கு ஆர்வம், உணர்ச்சி, ஊக்கம் முதலியன ஊட்டினர். அவரைப் பின் பற்றிய கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், சுத்தானந்த பாரதியார், பாரதிதாசன் என்னும் கனக சுப்பு ரத்தினம், இலங்கை நவாலியூர் க. சோமசுந்தர புலவர் முதலானோர் புதுமுறை பற்றிய பாக்களைப் பாடினர். கதை களையும் இனிய எளிய செய்யுள் வடிவில் யாத்து, யாவரும் 'தமிழ் எளிதுதான், தமிழ்ப்பாடல்கள் இன்பந்தருவனவே; எளிதில் விளங்கக்கூடியனவே,' என்று உரைக்குமாறு இன்பமூட்டித் தமிழ் அமுதினை ஊட்டிவருகின்றனர். மற் றொரு புறத்தில் உரைநடை நூல்கள் பெருகிக் கொண்டு வருகின்றன. தமிழில் ஆங்கிலத்திலுள்ளனபோல் சிறந்த உரை நடை நூல்களில் உலக விஷயங்களை யெல்லாம் யாவரும்படிக்கும்படி அமையவில்லை என்று கூறப்படும் குறைபாடு நீங்கப் பெருகிவருகின்றன. சிறந்த வசன நூல்கள் இலக்கிய சம்பந்தமாகவும் வெளிவருகின்றன, டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் போன்றவர்கள் அரிய சங்க நூல்களை யெல்லாம் அச்சிட்டு வெளிப்படுத்தினர். அவற் றிலுள்ள பொருள்களை எல்லாம் உரை நடை நூல்கள் சுமந்து கொண்டு வந்து மக்களுக்கு அளித்து உதவுகின் றனர், பத்திரிகைகளும் பெருகி மக்களைப் படிக்கத் தூண்டு கின்றன. அரசாங்கத்தினரும் தமிழ்க் கல்வியைக் கட்டாயக் கல்வியாக்கிக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் உயர் தரப் பாடதிட்டங்களை அமைத்துள்ளனர். பல்கலைக் கழகத் தார் வித்துவான்பரீட்சைஏற்படுத்தியும்,பி.ஏ.எம்.ஏ.பரீட்சை கள் அமைத்தும் ஆராய்ச்சி குழாம் அமைத்தும் தமிழ்வளர்ச்

சிக்குரிய ஆக்கங்களை அளித்து வருகின்றனர். புத்தகங்களைப் பிரசுரிக்கும் கழகங்களும் நிலையங்களும் பல தோன்றிச் சிறந்த அரிய புத்தகங்களைத் தக்கார்களைக் கொண்டு பிரசுரம் செய்துவருகின்றன. நாட்டில் எங்கும் கழகங்களும் சங்கங்களும் தோன்றித் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிவருவதோடு தமிழ்ப் புலவர்கள் நாட்களைக் கொண்டாடி மக்களுக்கு ஊக்கமளித்துவருகின்றன. இன்றைய நாட்களில் தமிழ் மகன் பரந்த அறிவு பெற்று விளங்கும் வாய்ப்புடையவனாக விளங்குகின்றான். தமிழ் வளர்ச்சியுற்று வருகிறதென்றே கூறவேண்டும். ஆயினும் கவித்துவ சக்தி குன்றி மறுமலர்ச்சியாக எளிய கவிகளையே இயற்றும் நிலை எய்தியுள்ளது தமிழ் வளர்ச்சி கவித்துவ சக்தி வளர வேண்டுமானால் பழந்தமிழ் நூல்களை நன்கு பயிலவேண்டும், அவற்றில் ஊன்றித் திளைக்கவேண்டும். இனிவரும் தமிழ் மாணவர்கள் ஆவன செய்வாராக.

# 3. பிறமதத்தார் தமிழ்த் தொண்டு

தமிழ் மொழியின் வளர்ச்சியில் தமிழகத்தார் மட்டும் கவலைகொண்டனர் என்பது அன்று. தமிழகத்தார் தமிழ் வளர்ச்சியில் ஊக்கங் காட்டாது உறங்கிக்கிடந்தனர் என்று கூறத்தக்க காலமும் இடை இடையே ஏற்பட்டது. அரசியல் நிலை, சமுதாய நிலை என்பவற்றின் மாறுதல்களால் அந்நிலை தமிழகத்தாரிடம் காணப்பட்டதாகக் கருதல்வேண்டும். தமிழ்நாட்டில் புகுந்த பிறமதத்தவர்களான பிறநாட்டவரும் அரிய தமிழ்த்தொண்டு புரிந்துள்ளனர்.

தமிழகத்திற்கு வட நாட்டிலிருந்து வந்த மதங்களில் பௌத்த மதமும் ஒன்று. பௌத்தமதம் தமிழகம் முழுவதும் பரவிச் சிறப்புற்றிருந்த காலமும் உண்டு. இம் மதத்தைப் பேணிப் பரப்பிய துறவிகள் தமிழ்நாட்டில் பல முக்கியமான ஊர்களில் மடங்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரையில் பௌத்தர் தமிழகத்தில் சிறப்புற்றிருந்தவராவர். பிறகு அவர்கள் செல்வாக்கு குன்றிப் பத்தாம் நூற்றாண்டில் அறவே மறைந்தனர்.

பௌத்த மதத்தைப் பரப்புதற்காகத் துறவிகள் தங்கிய இடங்களைப் பௌத்தப் பள்ளி என்று கூறுவர். மதத்தைப் பரப்புதற்கு அவர்கள் தமிழ் மக்களோடு தாமும் கலந்து பழகினர். தமிழ்மொழியை நன்கு கற்றனர். தமிழ் மொழி

யின் இனிமை அவர்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. பௌத்தர்களில் பெரும் புலவர்கள் தோன்றினர். தமிழ்க் கல்வியைத் தமிழ்ச்சிறுர்க்குக் கற்பித்தனர். பௌத்தர்களும் சமணர்களும் வாழ்ந்த மடங்கள் 'பள்ளி' என்ற பெயரால் தமிழ் மக்கள் வழங்கி வந்தனர். அந்த மடங்களிலிருந்த கூடங்களில் கற்பித்ததால் 'பள்ளிக்கூடம்' என்னும் பெயர் கல்விச்சாலைகளுக்கு ஏற்பட்டு இன்றும் அப்பெயரே வழங்கி வருதல் அறியலாம்.

மதத்தைப் பரப்ப முயல்வோர் கல்வி, வைத்தியம் இரண்டினையும் கைக்கொள்வர். கல்வியைப் பெற விரும்புவாரும், நோயை நீக்கிக்கொள்ள விரும்புவாரும் யாவரிடத்திலும் சென்று தமக்கு வேண்டியன பெறுவர். இவை இரண்டும் மக்களுக்குச் செய்யும் தொண்டுகளில் மிகச் சிறந்தனவாகும். இவற்றைச் செய்வாரை மக்கள் எல்லோரும் விரும்பிப் போற்றுவர். மற்றும் இளமையான மனத்திலும், தளர்ந்த மனத்திலும், எளிதில் தம் கருத்துக்களைப் புகுத்தித் தம் வசப்படுத்தலும் ஆகும்.

பௌத்தர்களில் பலர் தமிழ்மொழியைச் சிறக்கக் கற்றுச் சிறந்த தமிழ்ப் புலவர்களாகவும் விளங்கினர். அவர்கள் தங்கள் மதக் கொள்கைகளை மக்களிடையே பரப்புதற்கு அரிய நூல்கள் பல இயற்றினர். அந் நூல்களில் தங்கள் கொள்கைகளை ஆங்காங்கு ஏற்ற இடங்களில் எடுத்துக் கூறி விளக்குவாராயினர். அவ்வாறு முயன்று நூல்கள் பல பௌத்தர்களால் இயற்றப்பட்டன. சமயப் பூசல்களால் அழிந்தன பல. அழியாது எஞ்சி நின்றன சிலவே. ஐம்பெருங் காப்பியங்களைச் சேர்ந்தனவாகிய **குண்டலகேசி, வளையாபதி** என்பனவும், **சித்தாந்தத் தொகை, விம்பசார கதை, திருப்பதிகம்** என்பன கால வெள்ளத்தால் அழிந்தொழிந்தன. குண்டலகேசி, வளையாபதி என்பவற்றின் பாடல்கள் சிலவே புறத்திரட்டு என்று

நூலால் அறியக் கிடக்கின்றன. தொல்காப்பியம், யாப்பருங் கலம், சிலப்பதிகாரம் என்பவற்றின் உரைகளினாலும் எடுத்துக் காட்டப்படும் மேற்கோள் செய்யுட்களாலும் நாம் இவற்றைப்பற்றி அறிகின்றோம்.

இன்றைக்கு அழியாமல் கிடைத்திருப்பன இரண்டு நூல்களேயாகும். அவற்றில் ஒன்று இலக்கியம்; மற்றது இலக்கணம். இலக்கியமாய்த் துலங்குவது மணிமேகலை; இலக்கணமாய் விளங்குவது வீர சோழியம். இலக்கியமாக விளங்கும் மணிமேகலை தமிழில் கூறப்படும் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. அது மணிமேகலை என்பவள் துறவுபூண்டு அறம் பல புரிந்த கூறுகின்ற அரிய நூல், அதனை இயற்றிய மதுரைக் கூலவாணிகன் சீத்தலை சாத்தனார் என்பாரும் பௌத்த மதத்தினரே. இலக்கணமாக விளங்கும் வீரசோழியம் புத்தமித்திரனார் என்பவரால் இயற்றப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களை எடுத்துக் கூறுவது. அதற்கு உரை கண்டவர் பெருந்தேவனார் என்பவராவர். அவர் மேற்கோள்களாகக் காட்டியுள்ள செய்யுட்கள் பல புத்தர் மீது பாடப்பட்டனவாகவுள்ளன. பௌத்தர்கள் தமிழ்த் தாய் கைக்கு வளையாபதியும், காதிற்குக் குண்டலகேசியும் இடைக்கு மணிமேகலையும் தந்து சிறப்பித்துள்ளனர்.

பௌத்தரினும் அரிய தமிழ்த்தொண்டு செய்தவர்கள் சமணர்களே. சமயத் தொண்டாகக் கருதிச் செய்த அவை தமிழ்த் தொண்டாகப் பரிணமித்துத் தமிழ் மக்கள் உள்ளத்தில் குடிகொண்டுள்ளன. சமணர் என்ற சொல் 'சிரமணர்' என்ற சொல் திரிந்து வழங்குவதாகும். சிரமணர் என்ற சொல் ஜைன பௌத்தத் துறவிகளைக் குறிக்கும் சொல் ஆகும். நாளடைவில் சமணர் என்னும் சொல் ஜைனர்களையே குறிப்பதாக வழங்கலாயிற்று. சமண மதமும் சங்க காலத்திலேயே தமிழ்நாட்டில் பரவியது. ஆயினும் பௌத்த

மதம் பெற்றிருந்த வலிமையைச் சமணமதம் அக்காலத்தில் பெறவில்லை. கி. பி. மூன்ருண்டு முதல் பத்தாம் நூற்ருண்டு இறுதியாகச் சமண மதம் தழைக்கப் பௌத்த மதம் குன்றுத லுற்றது. ஆரும் நூற்ருண்டுக்குமேல் சமண மதமும் குன்றத் தொடங்கியது. சமணமதம் முற்பகுதியில் பௌத்தரோடும் பிற்பகுதியில் சைவ, வைண, வைதிக மதத்தோடும் போராடவேண்டியதாயிற்று. சமண மதத்தை அரசர்களும் தழுவியதால் அது வளர்தற்கு இடம் கிடைத்தது. மற்றும் சமணர்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவர்களாகவும் இருந்தனர்.

சைவசமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் சமணராய்த் தருமசேனர் என்ற பெயருடன் விளங்கிப் பின் சைவரானவர். சமணர்கள் மருத்துவம், கல்வி கற்பித்தல் அறச்சாலைகளமைத்தல், மதபோதனைகளைச் செய்தல் என்பவற்றை மேற்கொண்டு தம் மதத்தைப் பரப்பினர். நெடுமாறன், மகேந்திரவர்மன் என்பார் சமணராக இருந்து சைவரானுர்கள். சேரன் செங்குட்டுவனின் தம்பியான இளங்கோவடிகள் சமணத் துறவியானுர். இரண்டாம் குலோத்துங்க சோழன் சமணமத நூல்களை விரும்பிக் கற்ருன் என்று அறிகிருேம். எனவே, சமண மதம் அரசர் களையும் தம் வசமாக்கிக் கொண்டமையால் வலிமையுற்றுத் திகழ்ந்தது.

சமணர்கள் தமிழ்க்குச் செய்த தொண்டு அளப்பரியது. அவர்கள் காப்பியம், பிரபந்தம், இலக்கணம் முதலியன செய்தளித்துத் தமிழ் மொழியைப் பேணினர். சீவக சிந்தாமணி, சூளாமணி, யசோதரகாவியம், உதயணன்கதை நீலகேசி, நாககுமார காவியம், பெருங்கதை, மேருமந்திர புராணம் என்பன அவர்கள் செய்த இலக்கியப் பெருநூல் களாகும். நன்னூல், நேமிநாதம், யாப்பருங்கலம், யாப்

பருங் கலக்காரிகை, வச்சணந்திமாலை முதலியன அவர்கள் செய்த இல்க்கண நூல்களாகும். நாலடியார், பழமொழி, ஏலாதி, அறநெறிச்சாரம், சிறுபஞ்சமூலம் என்பன அவர்கள் செய்த நீதி நூல்களாகும். திருக்குறளையும் சமணர் இயற்றியதாகக் கூறுவாரும் உண்டு. சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு என்பன அகராதி இல்லாத அக்காலத்தில் சொற்பொருளை விளக்க எழுந்த நூல்களாகும்.

இன்றும் தமிழ்நாட்டில் இலக்கணம் கற்பார், நன்னூல், யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை என்னும் நூல்களையே கற்பர். இலக்கண விளக்கம், முத்துவீரியம், தொன்னூல் என்னும் நூல்களைக் கற்பாரே இல்லை. தொல்காப்பியமும் நன்னூலுக்குப்பின் கற்பாரற்றுப்போன நிலையை எய்திற்று என்றால் வேறு சொல்லுதற்குள்ளது என்? சீவக சிந்தாமணி என்பது தமிழ் ஐம்பெருங்களுள் ஒன்று. சூளாமணி ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்று. இவ்விரு நூல்களுமே விருத்தப்பாவின் மேன்மையை விளக்கிய நூல்கள். பெரியபுராணம், கம்பராமாயணம் என்பன செம்மைசான்ற விருத்தப்பாக்களால் பாடப் பெறுதற்கு அடிப்படையாக அமைந்தன சிந்தாமணியும் சூளாமணியுமே ஆம். கம்பன் விருத்தப்பாவினை நயமும், அழகும், எளிமையும், இனிமையும் பெறப் பாடுதற்குச் சீவகசிந்தாமணியே காரணமாகும். 'சிந்தாமணியென்னும் கடலில் ஓர் அகப்பை நீர் முகந்து தெள்ளித்துளித்த துளி கம்பராமாயணம்' என்பர். கற்பனையும், சொல்லூட்டமும், தொடர் அமைப்பும், கருத்தாழமும் கொண்டு திகழ்வன சீவக சிந்தாமணியும், சூளாமணியும், பெருங்கதையும் ஆகும். மயிலை நாதர், குணசாகரர் போன்ற உரையாசிரியர்களும் சமணர்களில் சிறந்து விளங்கினர். நரிவிருத்தம், திருக்கலம்பகம், திருநூற்றந்தாதி முதலான பிரபந்த நூல்களையும் அவர்கள் இயற்றியுள்ளனர்.

இஸ்லாம் மதம் தமிழகத்தில் பரவியது......இஸ்லாம் மதத்தினரிலும் புலவர்கள் பல்லோர் விளங்கினர். இஸ்லாம் மதத்தவர்களில் செல்வர் சிறந்த வணிகளாயும் இருந்தோர் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். இஸ்லாமிய குலத்திற்குரிய நூல்கள் பல தோன்றின. சிறந்த ஞானவானுக விளங்கிய குணங்குடி மஸ்தான் சாகிபுவை அறியாதார் யார்? தாயுமானவர் பாடல், பட்டினத்தார் பாடல் என்பன எவ்வாறு தமிழகத்தில் ஒவ்வொருவருக்கும் தெரியுமோ அவ்வாறே குணங்குடிமஸ்தான் சாகிபு பாடல்களையும் அறிவர். உமறுப்புலவர் என்பார் முகம்மது நபி நாயகத்தின் திவ்விய வரலாறு இனிய செந்தமிழ்ப் பாடல்களில் பாரகாவியமாகப் பாடியுள்ளார். அந்நூல் சீறுப்புராணம் என்னும் பெயருடையது. அது சுவையில் சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், சூளாமணி என்பவற்றைப்போல மிகவும் சிறந்து விளங்குகிறது. திருமதீனத்துக் கலம்பகம், நாகூர் ஆண்டவன் பிள்ளைத்தமிழ், திருமதீனத்தந்தாதி, நத்த ஹுஜெலியாண்டவர்கள் பிள்ளைத்தமிழ் முதலாகப் பல தமிழ் நூல்கள் உள்ளன. இதனுல் இஸ்லாமியரும் தமிழன்னைக்கு அரிய பல நூல்களை இயற்றித் தொண்டு புரிந்துள்ளனர்.

கிறிஸ்தவ மதம் தமிழகத்தில் பரவத் தொடங்கியது. மேனுட்டினின்றும் கிறிஸ்தவ மதப் பாதிரிமார்கள் பலர் தமிழகத்திற்கு வந்தார்கள். அவர்கள் தமிழ் மக்களோடு கலந்து வாழத் தொடங்கினர். தமிழ் மக்களிடையே கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பவேண்டுமாஞல் அவர்கள் மொழிகளிலே பரப்புதல்வேண்டும் என்று எண்ணித் தமிழைக் கற்கத் தொடங்கினர். அவ்வாறு கிறிஸ்தவ சமயப் பெருமக்களுள் ஒரு சிலர் தமிழின் சுவையிலும் இனிமையிலும் மூழ்கித் திளைத்துத் தமிழை நன்கு கற்றுப் பெரும் புலவர்களாஞர்கள். பலர் செவ்வையாய்க் கற்று அரிய தமிழ்

நூல்களை யெல்லாம் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த் தனர். அதனால் தமிழ் நூல்களில் சில ஆங்கிலம், லத்தின் பிரெஞ்சு, இட்டாலியன், ஜெர்மன் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. இதனால் தமிழ் மொழியின் சிறப்பு தமிழக எல்லையோடு அமைந்துவிடாமல் கடல்கடந்து சென்று உலகமெங்கும் பரவலாயிற்று. அதனால் தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் பெருமையுண்டாயிற்று. தமிழரைக் கற்றறிந்த உலக மக்கள் போற்றிப் புகழலாயினர். அத்தகைய நிலை தமிழருக்கு உண்டாகக் காரணமா யிருந்தோர் கிறிஸ்தவப் பாதிரிமார்களே. எண்ணற்றவர்தமிழ் நூல்களைக் கற்றுத் தெளிந்தார்கள். அவர்களுள் ஒரு சிலரைப்பற்றி இங்குக் காண்போம்.

வீரமாமுனிவர் என்னும் தமிழ்ப் பெயர் கொண்ட பெரியர் கி. பி. 1706–இல் தமிழ்நாட்டிற்கு வந்தார். இவரது இயற்பெயர் கான்ஸ்டான்டின் ஜோஸப் பெஸ்கி என்பது. அவர் தமிழ்நாட்டிற்கு வந்து சுப்பிர தீபக் கவிராயரிடம் தமிழ் மொழியை நன்கு கற்றார். இவரைத் தைரியநாத முனிவர் என்றும் கூறுவர், அவர் இந்தியரைப் போலவே உணவு உடை என்பவற்றையும் மேற்கொண்டார். அவர், தேம் பாவனி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கலமாலை, தொன்னூல் விளக்கம், சதுரகராதி முதலான பல நூல் களைச் செய்து தமிழன்னைக்கு அருந்தொண்டாற்றியுள்ளார். பரமார்த்த குருகதை என்ற உரை நடைநூலையும் எழுதி யுள்ளார். அவர் இத்தாலி தேசத்திலிருந்து வந்தவராவர். அவரே முதல் முதல் சதுரகராதி என்ற நூலைச் செய்து தமிழ் மொழிக்கு அகராதியை உண்டாக்கியவர். லத்தின் மொழியில் திருக்குறளின் இருபால்களை மொழிபெயர்த்தார்.

போப்பையர் என்பவர் தமிழ்த் தொண்டு செய்தவர் ஆவர். அவர் 1837–ஆம் ஆண்டில் திருநெல்வேலியி லுள்ள சாயர்புரத்திற்குக் கிறிஸ்தவ சமயத்தொண்டு புரிய

வந்தார். அவர் ஆரியங்காவுப்பிள்ளை என்பாரிடம் தமிழ் மொழியை நன்கு கற்ருர். தமிழ்க்கலைச் செல்வத்தை மேலை நாட்டாருக்குக் காட்டியவர் அவரே. அவருக்குத் தெலுங்கு மொழியும் நன்கு தெரியும். அவர் தமிழிலுள்ள நீதி நூல் களை நன்கு கற்ருர். அவர், போப்பையர் இலக்கணம், திருக்குறள், நாலடியார், திருவாசகம் என்ற நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். புறநானூற்றில் சில வடதளி என்று மற்ருெரு கோயிலுமுண்டு. பழையாறை, நாதன்கோயில், முழையூர், திருமத்தடி, பட்டீச்சரம், திருச் சத்திமுற்றம், ஆரியப்படையூர், பம்பைப்படையூர், சுந்தரப் பெருமான் கோயில், தாராசுரம், இராசேந்திரப்பேட்டை, சோழமாளிகை, அரிச்சந்திரபுரம், கோணப்பெருமாள் கோவில் என்பனவாகப் பல சிற்றூர்களாய்த் துலங்கும் இவை யாவும் ஒன்று சேர்ந்ததே சோழர் தலைநகராக விளங் கிய பழையாறைத் தலைநகராகும். இப்பெரு நகரில் பழையாறை வடதளி, பழையாறை மேற்றளி, பழையாறை தென்றளி, பட்டீச்சரம், திருச்சத்திமுற்றம், அருண்மொழித் தேவேச்சரம் பஞ்சவன்மாதேவீச்சரம், அரிச்சந்திரம் இராசராச்சரம், கோபிநாதப் பெருமாள் கோவில், நந்திபுர பாடல்களையும், புறப்பொருள் வெண்பாமாலையில் சில பகுதி களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இறந்தபின் தம்மை அடக்கம் செய்து கல் நடும்பொழுது ‘ தாழ்மையுள்ள ஒரு தமிழ் மாணவன்’ என்று பொறித்து வைக்குமாறு கட்டளையிட்டார். போப்பையர் என்ருல் அவர் தமிழ் மொழியினிடத்தில் வைத்திருந்த பற்றினை உணரலாம் அன்ருே ! மற்றும், அவர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் தமிழ், தெலுங்கு மொழிகளைப் போதிக்கும் ஆசிரியராக இருபது ஆண்டுகள் வேலை பார்த்தார்.

கால்டுவெல் ஐயர் என்பார் அயர்லாந்தில் பிறந்தவர்; ஸ்காட்லாந்தில் கல்வி கற்றவர்; இந்தியாவில் கிறிஸ்தவ

சமயத்தொண்டாற்றியவர். அவர் 1838-இல் சென்னைக்கு வந்தார். அவர் தமிழை நன்கு கற்றுத் தெளிந்தார். அவர் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலையும், திருநெல்வேலி வரலாறு, நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம் என்பனவாகிய நூல்களையும் இயற்றினார். கால்டுவெல் இயற்றிய ஒப்பிலக்கணமே அவருக்கு அழியாப் புகழைத் தந்தது. அந்நூலால் தமிழ்மொழியின் பெருமையும் சிறப்பும் மேனாட்டாருக்கும் தெளிவாகப் புலப்பட்டது. இம் மூவரைப்போலவே எல்லீஸ், ரேனியஸ் ட்ரூ என்பார்களும் தமிழ்மொழியை நன்கு கற்றுத் தமிழ் மொழிக்குத் தொண்டு பூண்டொழுகினர்.

இனி, தமிழர்களில் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்த பல பெரியார்கள் தமிழ் மொழிக்கு அரிய தொண்டுகள் பல செய்துள்ளனர், அவர்களுள் சிலர் தமிழ்மொழிக்குச் செய்துள்ள அருந் தொண்டுகளைக் காண்போம். வேத நாயகம் பிள்ளை என்பார் ஆங்கிலமும் தமிழும் நன்கு கற்றவர். நவீனம் என்னும் நாவல் எழுதுதலுக்கு வழி காட்டியவரும் அவரே. நகைச்சுவையோடு இனிய தமிழ் வசன நூல்களை எழுத வழிகாட்டியவரும் அவரே. திரிசிர புரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பல நூல் கற்றறிந்தார். அவர் இசைப்பயிற்சியும் உடையவர். அவர் சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சத்தியவேதக் கீர்த்தனை, திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, நீதி நூல், பெண்மதிமாலை, சுகுணசுந்தரி, பிரதாப முதலியார் சரித்திரம் என்பவற்றை இயற்றியுள்ளார்.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ரெட்டியார்பட்டி என்ற ஊரில் பிறந்தவரான கிருஷ்ணபிள்ளை என்பவர் சாயர்புரக்குத் தமிழாசிரியர் ஆனார். அவர் திருப்பாற் கடனாதக் கவிராயரிடம் பாடம் கேட்டவர். அவர் இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய மனோகரம், இரட்சணிய சமய

நிர்ணயம் என்ற நூல்களை இயற்றினர். இரட்சணிய யாத்திரிகம் என்பது ஏசுநாதரின் வரலாற்றை இனிது விளக்குவது. அவரது செய்யுட்கள் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தன. அது ஆங்கிலத்தில் ஜான் பனியன் என்பார் எழுதிய பில்கிரிம்ஸ் பிராகிரஸ் என்னும் மோட்ச யாத்திரை நூலின் மொழிப் பெயர்ப்பாகும்.

திருநெல்வேலியில் வேதநாயக சாஸ்திரியார் என்பார் சிறந்த கல்வி நலம் வாய்ந்தவர். அவர், பராபரன் மாலை, ஞான உலா, ஞானக் கும்மி, பேரின்பக் காதல், பெத்த லேகம் குறவஞ்சி, ஞானத்தச்சனுடகம், வண்ண சமுத்திரம், தியானப் புலம்பல், அறிவானந்தம், ஆதியானந்தம் ஆரணுதிந்தம் முதலான அரிய நூல்களைப் பாடியுள்ளார்.

மேலே கூறப்பட்டவர்களேயன்றிப் பல்லோர் பலவகையாலும் தமிழிற்குத் தொண்டு செய்துள்ளனர். எனவே, இவற்றை நோக்கும் பொழுது, தமிழ்மொழி சாதிசமய பேதமின்றி யாவரையும் ஒற்றுமைப் படுத்தி அன்பெனும் நாராற் பிணித்து இன்புறச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது என்று இனிது விளங்கும். சாதியோ, மதமோ தமிழ் மொழி வளர்ச்சியைத்தடை செய்ய மாட்டா. அதற்கு மாருகப் பற்பலபுத் தணிகளைப் பெற்றுத் தமிழ்த்தாய் சிறப்புறுவார். சிதறுண்டு கிடக்கும் தமிழ்நாடு ஒற்றுமைப்படவேண்டுமானுல் மக்கள் அனைவரும் தமிழ்மொழி வளர்ச்சியில் நாட்டத்தைச் செலுத்தவேண்டும். அவ்வாறு செலுத்தினுல் தமிழ்த் தொண்டில் புகுந்த யாவரும் தமிழமும்மாந்தி இன்பமும், அன்பும் உற்று, ஒற்றுமையாய்ச் சீரிய நிலையில் சிறந்து விளங்குவர் என்பது ஒருதலை. தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றுக்கு அடிப்படை என்பதை உணர்ந்துத் தமிழ்மக்கள் அனைவரும் தமிழை நன்கு கற்று அந்த தமிழ் மொழியால் இனிது வாழ்வாராக.

# 4. போற்றத் தகும் கிழவிகள்

## 1. ஊரைக்காத்த உத்தமி

சிற்றேறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்குமுன் தமிழ்நாட்டின் நிலை மிகவும் மாறுபட்டிருந்தது. தமிழ் முடி வேந்தர்களுக்குப் பின்னர் ஏறக்குறையப் பதினான்காம் நூற்றாண்டிற்குப் பின்னர் தமிழகத்தைப் பல்வேறு மன்னர்கள் படையெடுத்து ஆளத்தொடங்கினர். பாண்டியர் சோழர் ஆட்சி ஒழிந்தபின் நாயக்கரும், மகாராட்டிரரும் ஆளத்தொடங்கினர். நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தில் பாளையப்பட்டுக்கள் தோன்றலாயின. கி.பி, 1310–ல் மாலிக்காபூர் தென்னாட்டின் மேல் படையெடுத்து வந்தான். மதுரையைப் பொடியாக்கினான். கி. பி. 1365-ல் விஜய நகர மன்னர் மதுரையைக் கைப்பற்றினர். கம்பன உடையார் என்னும் விஜயநகர மன்னர் மதுரையைத் துருக்கரிடமிருந்து தனதாக்கிக் கொண்டார். அவர்தான் நாற்பத்தெட்டு ஆண்டுகளாக அடைபட்டிருந்த மீனாட்சி சுந்தரேசர் கோயிலை திறந்துவிட்டு மீண்டும் உயிர்ப்பித்துப் பூசைகள் நடைபெறுமாறு செய்தார். கி. பி. 1553-ல் நாகம நாயக்கன் என்பான் விஜயநகரத்தரசர் உத்தரவுப்படி மதுரையை யடைந்தான். பின்னர் வந்தவன் அவன் மகன் விசுவ நாயக்கன். அவனுடன் அரியநாத முதலியார் என்னும் அரிய நாயக முதலியார் வந்தார். அவரே எழுபத்திரண்டு பாளை

யங்களை வகுத்தவர். அது முதல் நாயக்கர் பாண்டியநாட்டில் வலுத்தது.

பிற்காலத்தில் பாளையப்பட்டுக்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே குறுநில மன்னர்களாயினர். அவர்களுக்குள் சண்டையும் பூசலும் கிளம்பின. அவ்வாறு கிளம்பிய குறுநில மன்னர்களுள் சிவகங்கை யரசர், சேதுநாட்டரசர், எட்டையுயரமன்னர், புதுக்கோட்டை மன்னர் என்பார் சிறந்தோர் ஆவர். அவர்களுக்குள் சண்டை சச்சரவுகள் அதிகமாயின. இந்நிலையில் ஊமைத்துரை என்பான் தோன்றினன். அக்காலத்தில் நாட்டில் அமைதியில்லை. ஊரில் அமைதியில்லை; மக்கள் மனத்தில் அமைதியில்லை. எங்கும் திருடும், கொள்ளையும், கொலையும் நடந்துவந்தன. தமிழகத்தின் தென்பகுதி மிகவும் சீர்கேடான நிலையில் மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லுந்தரம் அன்று. தீவர்த்திக் கொள்ளைக்காரர் தாம்வரும் நாள், நேரம் இவற்றை முன்னரே அறிவித்து வருவர். அவர்கள் வந்தவுடன் தங்களிடமுள்ளவற்றை யெல்லாம் மக்கள் காட்டிவிடவேண்டும். இல்லையேல் அவர்கள் தூணில் கட்டிவைத்து அடிப்பார்கள். சொல்லுதற்கு முடியாத துன்பங்களைச் செய்வார்கள்; வீட்டில் தீ வைத்து எரிப்பார்கள்; கொலையும் செய்வார்கள். அக்காலத்தில் ஊர்க்காவலும் இல்லை; போக்கு வரவுச் சாதனங்களும் இல்லை.

சிவகங்கைக் கருகில் ஒரு சிற்றூர். அதில் ஐந்நூறு வீடுகளே உண்டு. அவ்வூரில் காமாட்சியம்மாள் என்பாள் ஒருத்தி தன் இரு புதல்வர்களுடனும், இரு புதல்விகளுடனும் வாழ்ந்து வந்தாள். அவள் தனக்குச் சிறிது நிலமும், ஒரு வீடும் பெற்றவள். மைந்தர் இருவரில் ஒருவர் பள்ளிக்கூடம் வைத்து நடத்திவந்தார், மற்றவர் வேறு தொழில் செய்துகொண்டும் வேளாண்மையைச் செய்துகொண்டும் வந்தார். மருமக்கள் இருவரும் தங்களால் இன்ற வேலை

களைச் செய்துவந்தனர். எல்லோரும் ஓரே குடும்பமாய் வாழ்ந்துவந்தனர்.

காமாட்சியம்மாள் வயது முதிர்ந்தவள்; கல்வி கேள்விகளில் சிறந்தவள். இராமாயணம், பாரதம், பாகவதம், திருவிளையாடற்புராணக் கதைகள், கந்தபுராணக் கதைகள், யாவற்றையும் நன்கு கற்றவள்; அவற்றைப் பிறர்க்குப் பக்தியும் அன்பும் உண்டாகுமாறு எடுத்துக்கூறும் திறம் வாயந்தவள். தேவாரம், திருப்புகழ், திருவாசகம், நாலாயிரப்பிரபந்தம், முதலான அருட்பாடல்களை .மிகவும் இனிமையாகவும் கனிவாகவும் பாடக்கூடியவள். உள்ள பொருளைக் கொண்டு திருப்தியடையும் மன நிறைவு படைத்தவள் காமாட்சியம்மாள். அவள் தெய்வ பக்தியில் முதிர்ந்தவள் ஜபதபங்களில் குறையாதவள்; அவள் தினந்தோறும் கோயிலிற்குச் சென்று வருதலில் தவறமாட்டாள், அவள் குடும்பத்திற்கு வந்த வருமானம் போதுமானதாகவே இருந்தது.

காமாட்சியம்மாளுக்குக் கைவைத்தியமும் தெரியும். விஷக்கடிக்கு மந்திரித்துக் கொள்ளும் பொருட்டு அவ்வூரார் அனைவரும் அவளிடத்தில் தான் வருவர். அவள் கைராசியுடையவள் என்று அவ்வூரார் அனைவரும் புகழ்வர். அவ்வூரில் யார் வீட்டில் எந்நேரத்தில் பிரசவம் என்ருலும் காமாட்சியம்மாள் சென்று உதவுவாள். அதற்காக அவள் யாதொன்றும் வாங்குவதுமில்லை. அந்த ஊர்க்கு யார் வந்தாலும் எந்த நேரத்தில் வந்தாலும் காமாட்சியம்மாள் மன மகிழ்ச்சியோடு அன்னம் இடுவாள். சுருங்கக் கூறின் அவளை ஊரார் அனைவரும் உத்தமி என்று போற்றினர். யாவரும் அவள் பேச்சைக் கேட்பர்; இயன்ற உதவியும் புரிவர்.

நாடு முழுவதும் சீர்கேடுற்றிருக்கும் காலத்தில் அவ்வூர் மட்டும் கொள்ளைக்காரர்களிடமிருந்து தப்பிவிடுமோ?

ஒரு நாள் காமாட்சியம்மாள் கோயிலுக்குச் சென்று விட்டு திரும்பிவந்து கொண்டிருந்தாள். இரு பிச்சைக்காரர்கள் வீடு வீடாய் ஏறுவதும் உற்று நோக்குவதும் சைகையாலும் மெல்லிய குரலாலும் பேசிக்கொள்வதும் காமாட்சியம்மாள் கண்களுக்கும் புலனுகாமல் போகவில்லை. வந்தவர் இருவரும் ஒரு வீட்டின் சுவரில் கரிக்கோடுபோட்டனர்; பின்புறமாக வரமுயன்றதையும் காமாட்சியம்மாள் கவனித்தாள்.

காமாட்சியம்மாள் வீட்டின் பின்புறத்தில் பெரிய கொட்டகை ஒன்றிருந்தது. அவ்விரு பிச்சைக்காரர்களும் பின்பக்கம் வருவார்கள் என்று அறிந்த காமாட்சியம்மாள் பின்புறக் கொட்டகைக்குச் சென்ருள். இரு பிச்சைக்காரர்களும் பின்புறத்திலிருந்த சிறிய சந்தின் வழியாக ஒவ்வொரு வீட்டினிடத்தும் நின்று உற்று நோக்கிக் கொண்டே வந்தனர். 'இந்த வீடு நாளைக்கு' என்று கூறிய மெல்லிய குரல் காமாட்சியம்மாள் காதில் விழுந்தது. மீண்டும் பிச்சைக்காரர் இருவரும் மற்ருெரு பக்கமாகத தெருவில் பிச்சைக் கேட்டுக்கொண்டே வந்தனர். அந்த ஊருக்கு கொள்ளைக்காரர் வரப்போகிருர்கள் என்ற வதந்தி பரவியிருந்ததால், வீடுகளில் ஆண்கள் இருந்து கொண்டிருந்தனர். பிச்சை கேட்டவர்களுக்குச் சிலர் இட்டனர்; சிலர் :விரட்டியடித்தனர். காமாட்சியம்மாள் வீட்டிற்கும் அவ்விருவர் வந்து பிச்சை கேட்டுக் கொண்டே உற்று நோக்கினர். காமாட்சியம்மாள் பிச்சை போட்டாள். ஊரில் எல்லோரும் தடியும் கம்பும் தயாரித்துக்கொண்டு ஆட்கள் காவல் செய்ய இருந்தனர்.

மறுநாள் காமாட்சியம்மாள் வீட்டின் பின்புறக் கொட்டகையைச் சுத்தம் செய்தாள். அரிசி, பருப்பு, காய் கறிகள் எல்லாம் தேடிவைத்தாள். கொல்லைப்புறத்து வாழைத் தோட்டத்திலிருந்து இருபது முப்பது இலைகளைத் தயாரித்துக் கட்டிவைத்தாள். பெரிய கொப்பரை நிரம்ப நீர்

நிறைத்து வைத்தாள். வெங்காயத்தைக் கையில் தொடா தவள் நிரம்பவெங்காயம் வாங்கி உரித்து வைத்தாள். இரவு 9 மணிக்கு மேல் அடுப்பு மூட்டிப் பெரிய தவலையில் செம் மையாக மல்லிகை மலர்போல் சோறு வடித்து வைத் தாள். முருங்கைக்காயும் வெங்காயமும் போட்டு நிரம்ப வாசனையாகச் சாம்பார் செய்து வைத்தாள். எலிமிச்சம் பழ ரசம், கத்தரிக்காய் பொறியல், நல்ல ஊறுகாய், குழம் பான மோர் முதலியன தயாரித்தாள். மணியும் பதினென்ரு யிற்று. காமாட்சியம்மாள் பஞ்சார சபம் செய்து கொட்ட கையில் ஓரிடத்தில் அமர்ந்திருந்தாள். சாம்பாரின் நறுமணம் கமகம என்று வீசிற்று.

நள்ளிரவு; ஒரு மணிக்கு மேல் ஆயிற்று. இருளோ நிறைந்திருந்தது. திடீர் எனப் புறக்கடைகதவு கீழே விழுந் தது. திடுதிடு எனக் கொள்ளைக் கூட்டத்தார்கள் உள்ளே நுழைந்தனர், காமாட்சியம்மாள் எழுந்தாள். முகத்தில் நகை தவிழ்ந்தது; உள்ளத்தில் சிறிதும் அச்சமில்லை என்பதை அவள் முகம் காட்டிற்று. "வாருங்கள், குழந்தைகளே, வாருங்கள். நெடுந்தூரம் நடந்து வந்திருக்கிறீர்கள். நிரம்பப் பசிக்கும். அதோ கொப்பரையில் நீர் உள்ளது. கைகால் கழுவிக்கொண்டு வாருங்கள். சாப்பிடலாம்," என்று சொல்லிக்கொண்டே கொட்டகைக்குட் சென்று சாம்பார் பாத்திரத்தை மூடியிருந்த தட்டத்தை நீக்கிக் கரண்டியால் சாம்பாரைக் கிளறினாள். சாம்பாரின் நறுமணம் வீசவே திருடர்களுக்கு நாவில் நீர் ஊறிற்று. அவர்கள் கை கால் களைக் கழுவச்சென்றனர். அதற்குள் காமாட்சியம்மாள் இலைகளைப் போட்டுப் பரிமாறத் தொடங்கினாள். திருடர்கள் வந்து அமர்ந்தனர். யாவர்க்கும் அன்னம் படைத்தாள். யாவரும் மிக்க சுவையாயிருந்த சாம்பார், ரசம், ஊறுகாய், பொறியல் என்பவற்றைச் சோற்றுடன் சேர்த்து வயிரார உண்டனர். அத்தகைய சுவையான சாப்பாட்டைஅவர்கள் அதற்கு முன் சாப்பிட்டதில்லை.

காமாட்சியம்மாள் மெல்லக் கொள்ளைக் கூட்டத்தார் தலைவனை நோக்கி, "ஏனோ, இந்தப் பணக்காரர்களை இறைவன் கல் நெஞ்சராகப் படைத்தான்? 'வயிற்றுக்கில்லை; வயிறாரச் சோறு இடு' என்று கேட்டால் பணக்காரன் அடித்துத் துரத்துகிறான். அதிகாரிகள் அதட்டி உருட்டிக் கேட்டால் வாரிக் கொடுக்கிறான். 'உதைப்பேன், கொன்று விடுவேன்' என்பாருக்குப் பெட்டிச் சாவியைக்கொடுக்கிறான். ஏழைகளிடம் இரக்கமும், அன்பும் ஈகையும் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்," என்றாள். அக்கள்ளவர் தலைவன், "தாயே, பணக்காரனுக்கு ஈகையும் இரக்கமும் இருந்தால் நாங்கள் ஏன் இந்தத் தொழிலுக்கு வருகிறோம்," என்றான். "உலகில் மக்கள் வாழும் காலம் கொஞ்சமே. பாலபருவமும், முதுமைப் பருவமும் நீக்கிப்பார்த்தால் மீதியிருக்கும் காலம் கொஞ்சமே. அதிலும் நோய்; தூக்கம் முதலியவற்றால் கழியும் நாட்கள் பல. எஞ்சியிருப்பதில் நல்லன செய்யாமல் தீயதாகிய இத் தொழிலைச் செய்வானேன். வேறேதேனும் தொழிலைத் தேடிக்கொள்ளலாகாதா. பாவமும் பழியும் மறு பிறப்பிலும் துன்பத்தையே அளிக்கும் இத்தொழிலைச் செய்வானேன்," என்று மெல்ல உருக்கமாகக் காமாட்சியம்மாள் கூறினாள். பின், அவள், "அதோ வீட்டினுள் குழந்தை குட்டிகள் தூங்குகின்றன. அவர்களை மட்டும் ஒன்றும் செய்யாதீர்கள். நான் என்னால் இயன்ற தருமங்களைச் செய்துவருகிறேன். யார் எந்த நேரத்தில் வந்தாலும் அன்னம் போடுகிறேன். நீங்கள் உங்களுக்கு விருப்பமானவற்றை எடுத்துச் செல்லுங்கள், நீங்கள் நெடுந்தூரத்திலிருந்து வருகிறீர்கள். ஊரில் எல்லோரும் தடியும் கம்பும் தயாரித்தார்கள். களைப்புடன் நீங்கள் வருவீர்களே என்று என் மனதில் பட்டது; இரக்கமுண்டாயிற்று. நான் சோறு தயாரித்தேன். நீங்கள் வயிறார உண்டீர்கள். என் மனம் திருப்தி யடைந்தது; இந்தப் புண்ணியமே எனக்குப் போதும். நீங்கள் வீட்டிற்குள் சென்று

எதனை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லலாம். ஆனால் குழந்தைகளை மட்டும் ஒன்றும் செய்து விடாதீர்கள்," என்று மெல்லிய குரலில் நா தழுதழுக்கக் கூறி இரக்கமான பார்வையுடன் இரு கைகளையும் குவித்தாள்.

கள்வர் தலைவனுக்கு உண்டான மன மாறுபாடு சொல்லும் தரமன்று. "தாயே, நாங்கள் இரக்கமற்றவர்கள் அல்லர். நாங்கள் உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்ய மாட்டோம். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டாமா? நீங்கள் படைத்த சோறு மிக்க சுவையாக இருந்தது; வயிறார உண்டோம்; இனி உங்கள் வீட்டிற்குக் கள்ளர் பயம் என்பதே இல்லை," என்றான்.

"என்வீடு என்ன? எல்லா வீடுகளும் என்வீடுகளே. இவ்வூர் மக்கள் அனைவரும் என் குழந்தைகளே. என் உதவியின்றிப் பிறந்த குழந்தைகள் யாருமே யிரார். எல்லோரையும் என் மக்களாகவே நான் கருதுகிறேன். அவர்களும் என்னைத் தாயெனவே கருதுகிறார்கள். உங்களையும் என் குழந்தைகள் என்று பரிந்து உணவிட்டேன்." என்றாள் காமாட்சியம்மாள். அவள் சொல்லில் இரக்கமும் அன்பும் குழைவும் மிளிர்ந்தன.

கள்வர் தலைவன், "தாயே, நாங்கள் நன்றி கெட்டவர் அல்லோம். எங்களுக்கு நன்மை செய்தவர்களுக்குத் தீமை செய்யோம். இனி இந்த ஊருக்கே கள்வர் பயம் இல்லை என்பதைத் திண்ணமாய்க் கொள்க," என்று கூறி விட்டுத் தன் இனத்தாருடன் அவ்விடம் விட்டுச்சென்றான். மறு நாள் நிகழ்ந்தவை யாவும் அவ்வூரார் அனைவருக்கும் தெரிந்தது. அவ்வூரார் அனைவரும் வந்து "ஊரைக் காத்த உத்தமி," "அச்சம் அகற்றிய அன்னை" என்று கூறிப் புகழ்ந்தனர். காமாட்சியம்மாள் அவ்வூரார் யாவரும் மதித்துப் போற்றச் சிறப்பாக வாழ்ந்து வந்தாள். அவ்வூரார்

அனைவரும் அறஞ்செயும் மனம் படைத்தவராகிக் கள்வர் பயமின்றிக் களிப்போடு வாழ்ந்து வந்தனர்.

## 2. பொன்னைக் காத்த கிழவி

தஞ்சை ஜில்லாவில் உள்ளிக்கடை என்று ஒரு கிராமம் உண்டு. அது அய்யம்பேட்டைக்கு அருகில் உள்ளது. அவ்வூர் மிகச் சிறிதே.

அவ்வூரில் வாழ்ந்த சிறந்த செல்வரான ஓர் அந்தணர் சில மைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு பெருஞ் செல்வர் வீட்டில் நடைபெற்ற கலியாணம் ஒன்றிற்குச் செல்ல வேண்டியதாயிற்று. அக் காலத்தில் சாதாரணமானவர் வீட்டில் கலியாணம் நடந்தாலும் ஐந்து நாட்களுக்குக் குறை யாமல் நடக்கும். மிக்க பெருஞ் செல்வர் வீட்டுக் கலியா ணம் என்றால் கேட்கவேண்டுமா ? பாட்டுக் கச்சேரிகள், நடனக் கச்சேரிகள், விகடக் கச்சேரிகள் முதலியன நடை பெறும். எவ்வளவு மக்கள் வந்தாலும் வாயார, வயிறாரச் சுவைமிக்க உணவு கிடைக்கும். மணமக்கள் ஊர்வலம் வரும்நாளன்று மேளக் கச்சேரிகளும், அபிநயங்களும் பாணவேடிக்கைகளும் நடைபெறும். அவற்றையெல்லாம் கேட்கவும் காணவும் பத்து, பதினைந்து மைல் தூரத்திலுள்ள மக்களும் வருவர். அப்பெரிய கலியாணம் உள்ளிக்கடைச் செல்வர் உறவினர் வீட்டுக் கலியாணம். ஆதலால் உள்ளிக் கடைச் செல்வர் தம் வயது முதிர்ந்த தாயையும் வேலை யாட்கள் சிலரையும் வீட்டில் வைத்துவிட்டுத் தம் குடும்பத் தோடு கலியாணத்திற்குச் சென்றிருந்தார்.

திருடர்களுக்குச் செல்வர் ஊரிலில்லை என்ற செய்தி கிடைத்தது. அதுவே தக்க தருணம் என்று திட்டமிட்டு அச் செல்வர் வீட்டிற்குத் திருடச் செல்ல வேண்டுமெனத்

தீர்மானித்தனர். அவர்கள் வரத் தீர்மானித்த நாளன்று மண மக்கள் ஊர்வலம் நடக்கும் நாள். ஆதலால் அன்று பகலில் வீட்டைக் காவல் புரிந்துகொண்டு கிழவிக்குத் துணையா யிருந்த ஆட்கள், ஊர்வலத்தைப் பார்க்கத் தாங்கள் செல்வ தாகவும் அன்றிரவு மட்டும் தங்களைப் போவதற்கு விடுமா றும் கேட்டுக்கொண்டனர். கிழவியும் வேலைக்காரர்களுக்கு ஊர்வலத்தைப் பார்த்துவர அனுமதித்தாள்.

இரவு பன்னிரண்டு மணிக்குமேல் ஆயிற்று. ஊரெல் லாம் அடங்கிவிட்டது. எங்கும் ஒலியற்று ஓய்ந்திருந்தது. இருளும் நிறைந்திருந்தது. திருடர்கள் வந்து சுவரின்மேல் ஏணி சாத்திக் கூரைமீது ஏறி வீட்டுமுற்றத்தில் குதித்தனர். கிழவிக்கு இயல்பாகவே தூக்கம் வராது. அன்று வேலை யாட்களும் வரவில்லை, ஆதலால் கிழவி தூங்கவில்லை. முற்றத்தில் பலர் குதித்த சத்தம் கேட்டதால் அவர்கள் திருடர்களாகத்தான் இருக்கவேண்டும், என்று கிழவி மனதில் எண்ணிக்கொண்டாள். ஏதேனும் கத்தினல் உயிருக்கு அபத்துண்டாகும் என்பது அவளுக்குத் தெரிந் தது. எப்படியாவது தந்திரம் செய்து திருடர்களைப் பிடித்து விட வேண்டுமென்று ஆலோசித்தவளாய்க் கைகால் களையும் அசைக்காதவளாய்ப் படுத்துக்கிடந்தாள்.

திருடர்கள் மெள்ள வந்து விளக்கை ஏற்றினர். வீட்டில் யார் யார் எங்கெங்கு படுத்துக்கிடக்கிருர்கள் என்று அறியும் பொருட்டுச் சுற்றிவந்தனர். கிழவி ஒருத்தி யைத் தவிர வேறு யாரும் வீட்டில் இல்லை என்பதையும் உணர்ந்தனர்; கிழவியிடம் நெருங்கினர். கிழவி யாதொரு பதட்டமும் இன்றி மெல்ல எழுந்தாள்; உட்கார்ந்துகொண் டாள். "யாரப்பா, நீங்கள் எங்கு வந்தீர்கள்?" என்று கிழவி கேட்டாள். திருடர் தலைவன் "கிழவி, கூவாதே, சத்தம் செய்தால் கழுத்தைத் திருகிக் கொன்றுவிடுவேன். வீட்டில் வேறு யார் இருக்கிருர்கள்," என்ருன்.

கிழவி, " ஓ ! நீங்களா, வாருங்கள், வாருங்கள். நல்ல காலம் வந்தீர்களே, என் வேண்டுகோள் இன்றைக்குத் தான் பலித்தது. இவ்வளவு வருஷங்களாய் முறையிடும் எனக்கு இன்றைக்குத்தான் கடவுள் கருணை செய்தார். அப்பா, வாருங்கள். வீட்டில் வேறு யாரும் இல்லை. நான் ஒருத்திதான். அந்தப்பாவி—என் வயிறு எரிந்தால் விடுமா? எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு செல்லுங்கள்," என்றாள்.

திருடர் தலைவன், "பணப்பெட்டி எங்கே இருக்கிறது? வீட்டு அறைகள் எல்லாம் பூட்டியுள்ளனவே, சாவிகள் எங்கே கொடு," என்றான்.

கிழவி, " அப்பா, இதோ என்னிடம்தான் சாவிகள் இருக்கின்றன. அவற்றைத் தருகிறேன், ஒன்று விடாமல் எல்லாவற்றையும் எடுத்துச் செல்லுங்கள். அப்பொழுதான் என்மனம் ஆறுதல்பெறும். என்னைப் பதைத்துப் பரிதவிக்க விடும் அவன் வாழ்வதா ? பெற்றவளாயிற்றே என்று நினைத்துப் பார்க்கிறானா ? நல்லதுணி கொடுக்கிறானா ? இவ்வளவு சொத்தும் என் கணவன் தேடியன அல்லவா ? அவரிருக்கும் பொழுது நான் எவ்வாறு வாழ்ந்தேன். நான்கு நாட்களாய்ச் சோறு இல்லை, பொங்கித்தின்று கொண்டிரு. நான் கலியாணத்திற்கு போய்வருகிறேன் என்று சொல்லிவிட்டுக் குடும்பத்தோடு போய்விட்டான். இத்தனை பெரிய வீட்டில் என்னைத் தன்னந்தனியாக விட்டு விட்டுச் சென்று விட்டான். எனக்கோ கண் தெரியவில்லை ; கை கால்கள் தள்ளாடுகின்றன. எப்படிச் சமைப்பேன், சாப்பிடுவேன் என்று அவன் எண்ணினானோ ? நான் தினந் தோறும் இறைவனை வேண்டிக்கொண்டேன். இன்று அதன் பயன் கிடைத்தது;," என்று சொல்லிக்கொண்டு சாவிக் கொத்தினைக் கையில் கொடுத்தாள்.

திருடர் தலைவன் அதனை வாங்கிக்கொண்டு சென்று கூடத்தின் அறையைத் திறந்தான். கிழவியும் மெள்ளத் தள்ளாடி நடப்பவள்போலச் சுவரைப் பிடித்துக்கெண்டு அந்த அறைக்குச் சென்றாள். திருடர்கள் அறையுள் புகுந்தனர். கிழவியும் உள்ளே நுழைந்தாள். "அப்பா, இந்த அறைதான் இந்த வீட்டில் பெரிய அறை. இதில்தான் செல்வத்தையெல்லாம், பாவி, குடத்திலிட்டுப் புதைத்துவைத்திருக்கிறான். கோடிக்குச் செல்லுங்கள். அதோ தெரிகிறது அல்லவா சற்று மேடான இடம். அதன் கீழ்தான் குடத்துள் பணமும் நகைகளும் உள்ளன," என்றாள் கிழவி. தோண்டுதற்கு யாதொன்றும் திருடர்கள் கொண்டுவரவில்லை. ஆதலால் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அதற்குள் கிழவி, "நீங்கள் மண்வெட்டி, கடப்பாறை ஒன்றும் கொண்டு வரவில்லையா? போகட்டும் இருங்கள். நான் போய்க் கொண்டு வருகிறேன்," என்று கூறிக்கொண்டே சுவரைப்பிடித்துக் கொண்டே கதவு நிலையருகு வந்தாள். கதவை நெருங்கியதும் கிழவியின் தள்ளாடிய நிலையெல்லாம் பறந்தோடிப்போயிற்று. கதவுச் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு விரைவாக இழுத்துக் கதவைமூடிச் சங்கிலியை கதவு நிலையில் மாட்டி விட்டாள். திருடர்கள் அறையுள் அகப்பட்டுக்கொண்டனர்.

கிழவி கடுகி நடந்து வாசற் கதவினைத் திறந்துகொண்டு வந்து அண்டை அயல் வீடுகளில் சத்தம் போட்டாள். அவ்வளவு தான்! ஒரு நொடியில் அக்கிரகாரத்திலுள்ளவர்களும் வேலைக்காரர்களும் திரண்டுவிட்டனர், எல்லோரும் உள்ளே அறையண்டை வந்து கதவைத்திறந்தனர். பெருந்திரளான மக்கள் முன் திருடர்கள் சிலர் என்ன செய்ய முடியும்? திருடர்கள் அனைவரும் அகப்பட்டுக் கொண்டனர். எல்லோரையும் பிடித்துத் தெருத் தூண்களில் கட்டிவைத்தனர். பொழுது புலர்ந்த பின் எல்லோரையும் பிடித்துச் சென்று அய்யம்பேட்டைப் போலீஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்

தனர். கிழவி நடந்தவற்றை எல்லாம் கூறினாள். வழக்கு நடந்தது. திருடர்கள் தண்டிக்கப்பட்டனர். தஞ்சை ஜில்லாக் கலெக்டர் கிழவிக்கு வெள்ளி பதக்கம் ஒன்று அளித்து அவளுடைய சாமர்த்தியத்தைப் புகழ்ந்தார்.

கலியாணத்திற்குச் சென்றிருந்த செல்வர் திரும்பி நிகழ்ந்தவற்றைக் கேட்டறிந்து தாயின் அரிய செயலைப் பாராட்டி மகிழ்ந்தார்.

## 3. ஏடுகாத்த கிழவி

இராமநாதபுரத்தரசர்களைச் சேதுகாவலர் என்றும், சேதுபதிகள் என்றும் அழைப்பர். அவர்கள் தமிழ் மொழிப் பற்று மிக்குடையவர்கள்; தமிழ் வித்துவான்களுக்குப் பொன்னும் பொருளும் அளித்து ஆதரித்தவர்கள். அவர்கள் சபையில் தமிழ்ப் புலவர் பல்வேறிடங்களிலிருந்தும் வந்து குவிந்திருப்பர். புலவர் தம் தம் ஆற்றல்களைத் தோற்றுவிக்கச் செய்யுட்களைப் பாடிக்கொண்டு வருவார்கள். பல பிரசங்கங்கள் அரசவையில் நடக்கும். சேதுபதிகள் அப்புலவர்களுக்குத் தக்கவாறு பொன்னைப் பரிசளிப்பார்கள்.

அக்காலத்தில் தமிழ்ப்புலவர்கள் ஆங்காங்குச் சிறந்து விளங்கும் குறு நில மன்னர்களையும், செல்வர்களையும் பாடிச் சன்மானம் பெற்று வாழ்ந்து வந்தனர். அத்தகையாருள் சிறுகம்பையூர் சர்க்கரைப் புலவர் என்பார் ஒருவர். அவர் இராமநாதபுரத்து அரண்மனை வித்வான். அம்மட்டுமின்றிப் பிரபந்தங்கள் பாடிச் சிவகங்கை, சேற்றூர், எட்டயபுரம், மருங்காபுரி முதலான ஜமீன்தார்களையும் செல்வர்களையும் மகிழ்வித்துச் சன்மானம் பெற்றுச் செல்வராக விளங்கினர். சர்க்கரைப் புலவரிடம் பணமும் நகையும் அதிகமுண்டு என்பதும், அவரைச் செல்வர்களும், ஜமீன்

தார்களும், சேதுகாவலரும் திரண்ட பணம் உதவிக் காப்பாற்றி வருகின்றனர் என்பதும் யாவருக்கும் தெரியும்.

கொள்ளையடிப்பதையே தம் தொழிலாகக் கொண்ட கொள்ளைக்காரர்களுக்கு இந்த விஷயம் தெரியாமல் போகுமா? ஒரு நாள் சர்க்கரைப் புலவர் வீட்டில் கொள்ளையடிப்பது என்று அவர்கள் தீர்மானித்தனர். நாளும் நேரமும் குறித்தனர். பின்னர் அவர்கள் ஒரு ஓலை நறுக்கில் தாங்கள் கொள்ளையடிக்க வரப்போகும் நாளையும் நேரத்தையும் எழுதி ஓர் ஆள் மூலம் புலவர்க்கு அனுப்பினர். ஆள் சென்று ஓலையைப் புலவரிடம் கொடுத்தான். ஓலையைப் படித்துப் பார்த்தார் புலவர். இன்னது செய்வது என்று தோன்றவில்லை. வேறு வழியாதுமில்லை. கொள்ளையடிப்பவரிடம் அகப்பட்டுக்கொண்டால் நேரிடும் துன்பங்களை எண்ணிப் புலவர் மனங்கலங்கினர். ஊர்க்காவல், போக்குவரவுச்சாதனங்கள் என்பன இல்லாத அந்த நாளில் புலவர் செய்யக்கூடியது யாதுளது? எல்லாவற்றையும் எப்படிக் கொண்டு செல்வது? எங்குச் செல்வது? செல்லும் பொழுது திருடர் பதிவிருந்து பார்த்துவிட்டால் பொருளும் உயிரும் போய்விடுமே.

புலவர் மனைவிமக்களையும் தாயையும் சுற்றத்தாரையும் வைத்துக் கொண்டு என்ன செய்யலாம் என்று ஆலோசித்தார். முடிவாகப் பணத்தையும் நகையும் குடத்தில் போட்டு மூடிப்பத்திரம் செய்து வீட்டின் பின்புறத்தில் குறித்ததோர் இடத்தில் புதைத்து வைத்து விடுவது என்றும், தாயான கிழவியை வீட்டில் வைத்துவிட்டு, யாதோ ஒரு காரியமாக மதுரைக்குப் பயணமாவதாகவும் வதந்தியைக் கிளப்பிவிட்டு குடும்பத்துடன் அயலூருக்குச் சென்று சிறிது காலம் இருந்துவிட்டு வருவதெனவும் தீர்மானித்தார். அவ்வாறே புலவர் பணத்தையும் நகைகளையும் குடத்தில் போட்டுமூடி வீட்டின் புன்புறத்தில் புதைத்தார். அவ்வாறு செய்தது

புலவர்க்கும், தாய்க்கும், மனைவிக்குமே தெரியும்; பிறர் அறியார். பின் ஒருநாள் மதுரைக்குச் சென்று வருவதாகச் சொல்லிக்கொண்டு வேற்றூருக்குப் போய்விட்டார். வீட்டில் புலவரின் தாயார் மட்டும் இருந்தனள்.

கொள்ளைக் கூட்டத்தார் குறித்தனுப்பிய நாள் வந்தது. அவர்கள் தவருமல் அந்த நாளில் வருவார்கள் என்று கிழவி நன்கு அறிந்திருந்தாள். கிழவி என்ன செய்ய முடியும்? எது நடந்தாலும் நடக்கட்டும் என்று அமர்ந்திருந்தாள். குறித்த நேரமும் வந்தது. கொள்ளைக் கூட்டத்தினரும் வந்தனர். கிழவி ஒன்றும் பேசாமல் அவர்கள் செய்வனவற்றை மட்டும் கவனித்துக் கொண்டே வந்தாள். கொள்ளைக் கூட்டத்தார் ஒவ்வோர் அறையையும் திறந்து பார்த்துக்கொண்டு வந்தனர்.

ஓர் அறையிலும் அவர்கள் தேடி வந்த பொருள் கிடைக்கவே இல்லை. கள்வர் தலைவனுக்குச் சினம் பொங்கியெழுந்தது. சர்க்கரைத் தன்னை ஏமாற்றி விட்டார் என்று அவன் எண்ணினன். ஒவ்வோர் அறையையும் சுற்றி வந்தபொழுது, ஓர் அறை நிரம்பப் பனைஓலைச்சுவடி ஏடுகள் கட்டுக்கட்டாய்க் கட்டி அழகாக அடுக்கி வைக்கப் பட்டிருத்தலைக் கண்டான். கள்வர் தலைவனுக்கோ ஆத்திரம் பொங்கி எழுந்தது. அவன் மற்றவர்களைப் பார்த்து, "இந்த ஓலைச்சவடிகளை யெல்லாம் வண்டியில் ஏற்றுங்கள். அடுப்பெரிக்கவேணும் உதவும். வந்து வெறுங்கையோடு போவதா? நம்மை ஏமாற்றிய புலவரை எளிதில் விடுவதில்லை," என்று கூறினன். மற்றவர்கள் ஓலைச் சுவடிகளை வண்டியில் ஏற்றத் தொடங்கினர்.

அதுவரையிலும் கிழவி ஒன்றும் பேசாமல் கள்வர்கள் செய்யும் அட்டூழியங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'ஓலைச்சுவடிகளை வண்டியிலேற்றுங்கள்; அடுப்பெரிக்க

வேணும் உதவும்' என்ற சொல் அவள் நெஞ்சைப் பிளந்தது. திருடர்கள் ஓலைச்சுவடிகளை வண்டியில் ஏற்றத் தொடங்கிய அச்செயலைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவள் மனத்தில் பலப்பல எண்ணங்கள் தோன்றின. ஓலைச்சுவடிகள் பரம்பரைச் சொத்து. அவை எவ்வளவோ காலமாக அருமையாகப் போற்றிக் காப்பாற்றப்பட்டவை. அவற்றை இழக்க அவள் மனம் துணியவில்லை. ஒரு நூலை ஏட்டில் எழுதிவைப்பது என்பது அக்காலத்தில் எளிதான காரியமன்று. தமிழ் மொழி நூல்களை யெல்லாம் வேறு வேறு இடங்களுக்குச் சென்று ஓலைச்சுவடிகள் உள்ளாரைக் கண்டுபிடித்து எடுகளைப் பெறுதல் என்பது எளிதான காரியமன்று. ஏடுகளைப் பார்த்து எழுதிக் கொள்ளவும் அவர்கள் தரமாட்டார்கள். மற்றும் நூல்களை ஏட்டில் எழுதுவதென்பது எல்லோருக்கும் இயலாது. எழுதுவோர் மிகச்சிலர். அவர்களுக்குக் கூலி கொடுக்கவேண்டும். மற்றும் ஒரு பெரிய நூலை எழுதி முடிப்பதற்குப் பலமாதங்கள் ஆகும். எழுதுவோர் கிடைப்பதும் அருமை. அவ்வளவு ஏடுகளையும் எழுதிச் சேர்க்கப் பல தலைமுறைகளாகியுள்ளன. அவற்றை இழக்க எவ்வாறு கிழவிக்கு மனம் வரும்? இக்காலத்தில் காகிதம், மை, பேனா, அச்சடிக்கும் யந்திரங்கள், முதலியன தோன்றியுள்ளமையால், பல்லாயிரக்கணக்கான புத்தகங்களை மிக எளிதில் அச்சடித்துக் குறைந்த விலையில் மக்கள் பெறுமாறு செய்ய முடிகிறது. புத்தகங்களும் எளிதில் கிடைக்கின்றன. இக் காலம் போன்றதன்று அக்காலம்.

"இவ்வோலைச் சுவடிகளால் அன்றோ நம் குடும்பத்தவர்கள் படித்து முன்னேற்றம் அடைந்தனர். எல்லோரும் கற்றவர்களாகவும், பெரும் புலவர்களாகவும் வந்ததும், ஜமீன்தார்களையும், பிரபுக்களையும் பாடிச் செல்வம் பெற்று வாழ்ந்ததும், இவ்வோலைச் சுவடிகளால் அன்றோ? இவற்றை

இழந்து விட்டால் இனி வரும் சந்ததியார் கல்விபெற வழி யின்றி வருந்துவரே! பரம்பரையால் வந்த புலமை நிறைந்த குடும்பத்தைப் பாழாகுமாறு விட்டுவிடலாமா? எவ்வளவோ அரிய நூல்கள் எல்லாம் இவ்வோலைச் சுவடிகளில் உள்ளனவே; இனி வரும் பிள்ளைகள் யாரிடம் சென்று அவற்றைக் கேட்டுப் பெறுவர். சர்க்கரைப் புலவர் செல்வரானதும் இவ்வோலைச் சுவடிகளால் தானே. பொருளை இழந்தேனும் ஓலைச்சுவடிகளைக் காப்பது நம் கடமை யன்றோ! 'கைப் பொருள் தன்னின் மெய்ப் பொருள் கல்வி' என்பது அவ்வையின் அருமை மொழி யன்றோ. பொருள் இன்று வரும்; நாளை அழியும். கல்வி அத்தகையதன்றே!, எனப்பலவாறு எண்ணிக் கிழவி ஓலைச்சுவடிகளை இழக்க மனமில்லாதவளாய்க் கள்வர் தலைவனை நோக்கி "அப்பா, இந்த ஓலைச்சுவடிகளை எடுத்துச் சென்றுஎன்ன செய்யப் போகிறாய்," என்று கேட்டாள்.

கள்வர் தலைவன், "இவற்றையா, புலவர்தான் என்னை ஏமாற்றிவிட்டாரே. வந்துவிட்டு வெறுங்கையோடு செல்வதா? இவற்றைக் கொண்டு சென்றால் அடுப்பெரிக்க வேணும் உதவும் அன்றோ?" என்றான்.

கிழவி, "அடுப்பெரிக்கவா, இவ்வோலைச் சுவடிகள் அடுப்பெரிக்கவும் உதவாதே. அவையெல்லாம் மிகப் மிகப் பழையன. பயன் படாதவை. அவற்றை வைத்துவிடு." என்று சொன்னாள்.

"வைத்துவிடுவதா? நன்றாகச் சொன்னாய். வந்து வெறுங்கையுடன் திரும்பலாமா?" என்றான் கள்வர் தலைவன்.

"உனக்கென்ன பொருள்தானே வேண்டும். பொருளைக் கொடுத்தால் ஓலைச்சுவடியை வைத்து விடுவாயா?" என்றாள் கிழவி.

"பணம் எங்கே ? காட்டு," என்றான் கள்வர் தலைவன் கிழவி அவர்களை அழைத்துச் சென்று பணத்தைப்புதைத்து வைத்திருந்த இடத்தைக் காட்டினாள். திருடர்கள் தோண்டிப் பணத்தை எடுத்துக் கொண்டார்கள். முன்பு போல ஓலைச்சுவடிகளை அடுக்கி வைத்துவிட்டுக் கள்வர்கள் சென்றார்கள். பரம்பரைச் சொத்தான ஓலைச் சுவடிகள் அழிவுறாமல் இனிவரும் வழித்தோன்றல்களுக்கு அழியாச் செல்வமாக நின்றதேபோதும் என்று கிழவி மகிழ்ந்தாள்.

# 5. தமிழர் வீரம்

**வீ**ரம் என்பது பெருமிதம் எனவும் கூறப்படும். பெருமிதம் அல்லது வீரம் நான்கு காரணங்களால் தோன்றும். நிறைந்த கல்வி பெற்றான் ஒருவன் எவர்க்கும் அஞ்ச வேண்டுவதில்லை. ஆதலால் அவன் பெருமிதத்தோடு—வீரத்தோடு விளங்குவான். படைக்கலப்பயிற்சியும் உடல் உரமும் பெற்றான் ஒருவன் எத்தகைய பகைவனுக்கும் அஞ்சமாட்டான். அவன் பெருமிதத்தோடு—வீரத்தோடு விளங்குவான். செயற்கருஞ் செயல்களைச் செய்தமையாலும் வேறு காரணங்களாலும் புகழ்பெற்றான் ஒருவன் எல்லோராலும் கொண்டாடப்படுவான். அவனுக்குப் பகைவர் என்பாரே இரார். எனவே, அவனும் பெருமிதத்தோடு-வீரத்தோடு விளங்குவான். தன்னிடத்துள்ள பொருள்களைத் தனக்கென வைத்துக்கொள்ளாது தன்னிடம் வருவார் யாவராயினும் எது கேட்பினும் ஈந்து அதனால் பெறும் இன்பத்தினைக் கண்டு அனுபவித்து மகிழ்கிறவனும் பெருமிதத்தோடு—வீரத்தோடு விளங்குவான். எனவே, பெருமிதமாகிய வீரம், கல்வி, அஞ்சாமை, புகழ், கொடை என்பவற்றையேனும் முற்றப்பெற்றிருப்பவர் இடத்துள்ள குணம் ஆகும்.

புறநானூறு என்னும் தமிழ் நூலை எடுத்துக்காணின் அதன் கண் ஈகை, வீரம் என்னும் இவ்விரண்டினுலும் எய்தப் பெறும் வீரத்தையே மதித்துப் போற்றினர் தமிழர் என்

பது இனிது விளங்கும். வீரம் போரில் தோற்றுவிக்கும் ஆற்றலாகும். வீரர்களை நடத்தும் மன்னனும் வீரம் செறிந்தவனாய்ப் பகைவர்களை அஞ்சாது எதிர்த்து அழிக்கும் ஆற்றல் உடையவனாய் விளங்கினான். மன்னர்கள் நாட்டைப் :பெரிதாக்கப் போர் நடத்துவர். குடிமக்கள் கிளைத்துச் செழித்துவாழ இடம் இல்லையானால் இடம் சிறிதென்று மூக்கம் துறப்பப் போர் புரிந்து பிற நாடுகளைக் கைப்பற்றி மக்களைக் குடியேற்றுவர். பிற நாட்டு மன்னன் கொடுங்கோலனாயின் அவனை அடக்குதற்குப் போர்வேட்டு எழுவர். பிற மன்னர் மகள் மறுத்த காலத்தும் போர் நிகழும். பிறநாட்டில் தம் நாட்டின் வர்த்தகர்களுக்கு இடையூறுகள் நேரிட்டாலும் போர் நிகழும். போரில் முன் வைத்த காலை பின் வைக்க மாட்டார்கள் வீரம் செறிந்த மறவர்கள்.

வீரத்தின் விளைவால் விளைந்த அரிய செய்திகள் பலவற்றைப் புறநானூற்றிலும் பதிற்றுப் பத்திலும் காணலாம். இமயத்தில் புலி, கயல், வில் பொறித்த செய்திகள் வீரத்தின் விளைவேயாகும். தமிழரின் போர்க்கலைப் பண்புகளை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, தும்பை, வாகை என்னும் புறத்திணைகள் நனி விளக்கும். வீரம் என்பது மறம் எனவும் படும். தமிழ் வீரர் மறவர் எனப்பட்டனர். போர்க்குறிக் காயங்களே புகழின் காயமெனக் கொண்டனர். விழுப்புண் என்று போர்க்குறிக் காயங்களைப்போற்றினர். விழுப்புண் படாத நாட்களை வாழ்ந்திருந்தும் பயனற்ற நாட்களாக எண்ணினர். நாட்டின் நன்மைக்காக உயிரை விடுதலே பெருங்கீர்த்தி என்றும், மானங்கெட வாழ்வதிலும் மரணமே உயர்ந்தது என்றும் மனத்திற் கொண்டவர்கள் மறவர்கள். படைக்கலம் வரும்பொழுது விழித்த கண் இமைத்தால் வீரத்திற்கு இழுக்கு ஆகும் என்று கருதுவர் மறவர். தந்தை போரில் மடிந்தால் மகன் சென்று வீரப்போர்விளைப்பான். மகனும் போரில் அழிவ

னேல் அவன் இளையர்கள் செல்வர். இவ்வாறு தாய் நாட்டைக் காக்கும் கடப்பாட்டோடு புற்றிலிருந்து ஈசல் கிளம்புதல் போல மறக்குடி இல்லங்களிலிருந்து மறவர்கள் போர்க்குச் செல்வர். இனித் தமிழர் வீரப் பண்பை விளக்கும் சில செய்திகளைக் காண்போம்.

“போரில் தன் மகன் கொடிய பகைவர் அழியும்படி தாக்கி அப்பகைவர் யானைகளை வெட்டி வீழ்த்தி மீருதல் கடன்,” என்றுஒருவீரத்தாய் கூறுகிருள். “உன்மகன்எங்கே?” என்று வினவியதற்கு வீரத்தாய் ஒருத்தி, “என் மகனுகிய புலி கிடந்து போன மலைக்குகை இது. அவன் போர்க் களத்தில் காணப்படுவான். அங்குச் சென்று காண்,” கூறி ளுள் மற்ருெரு வீரத்தாய் “போரில் என் மகன் பகைவர்க்கு உடைந்து புறமுதுகிட்டு ஓடி வந்திருப்பாளுயின் அவனுக் குப் பாலூட்டிய பழியை நீக்கிக்கொள்வேன்,” என்று கையில் வாளை யெடுத்தாள்; போர்க்களம் சென்ருள். வாளின்நுனியால் பிணங்களைப் பெயர்த்துப் பெயர்த்து மக னைத் தேடிவருபவள் மார்பில் பகைவர் அம்பு பாய்ந்து முக மலர்ந்து மல்லாந்து கிடக்கும் மகனைக் கண்டு பெற்ற நாளி லும் பெருமகிழ்வு கொண்டாள். முதல் நாள் போரில் தந்தை இறந்தான், மறுநாட்போரில் கணவன் மாண்டான்; மூன்ரும் நாட் போரில் உடன் பிறந்தான் மாண்டான்; நான் காம் நாளும் போர்ப்பறை கேட்டது. தன் குலத்தைவிளக்க ஒரே மகன்தான் உளன். அந்நிலையின் அவன் தாய் அச் சிறுமகனை அழைத்துக் கோலம் செய்து வேலைக் கையில் கொடுத் துப் போர்க்களத்திற்குப் போர் புரியுமாறு அனுப்பி ளுள் ஒரு வீரத்தாய். தன் மகன் பகைவர் களிற்றின் மேல் வேலை எறிந்து, அந்த வேலைத் திரும்பப்பெறும் ஆற்றில் இல்லாது வெறுங்கையோடு புறங்கொடுத்து மீண்டதைப் பார்த்து, ஆருச்சினத்தளாய், மறக்குடிக்கு அழியாத மாசு மண்டியதாக எண்ணி, “பகையரசரைப் போரிலே வென்று

அந்தப் போர்க்களத்தில் தானும் இறந்துபடாமல், யானை முகத்தெரிந்த வேலை அதனுடனேபோகவிட்டு நீ புறங் கொடுத்து திரும்பினாய் இதனால் நம் முன்னோர் செய்யாத பெரும்பழியை விளைவித்தனை. அத்தகைய மூடனாகிய உன்னைப்பெற்ற வயிற்றை அறுப்பேன்,'' என்று வீரமொழி முழக்கினாள். இத்தகைய வீரத்தாய்மார்களைப் பெற்றிருந் தது தமிழ்நாடு.

தமிழ் வேந்தர் பண்டு அறப்போரே புரிந்து வந்தனர். "அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்,'' என்று கழாத் தலையார் என்பவர் சிறப்பித்துக் கூறினார். போர்க்களத்தில் போர் செய்யும் வேந்தர்களுள் பொருது தோல்வியுற்றோன் தன்னை வென்ற வேந்தனது வீரச்சிறப்பை அறிந்து பாராட்டு தலும், வென்றோன் தன்பால் தோல்விபெற்றவன் செய்த போர் நலத்தைப் பாராட்டுதலும் உண்டு. தன்னோடு எதிர் நின்று பொருத வேந்தன் அஞ்சிய பொழுது அவ னோடு பொருதல் வீரமன்று எனவும் கருதப்பட்டது. போரில் புறமுதுகிட்டாரோடும், ஆயுதமின்றி நின்றாரோடும் போரிடல் வழக்கமில்லை, போரில் புண்பட்டுவரும் வீரர் கள் புண்களைப் பெண்கள் மருந்திட்டு ஆற்றுதல் வழக்கம்.

பண்டைத் தமிழ் மன்னர்களின் சிறப்புக்களைக் கூறும் தமிழ் நூல்களில் அவர்களுடைய படை வீரமும், கொடை வீரமுமே சிறப்பிக்கப்பட்டுள்ளன. அம்மன்னர்கள் அவ் விரண்டையுமே தம் இரு கண்களாக மதித்துப் போற்றி வந்தனர் என்பது நன்கு விளங்கும். பறம்பு நாட்டை ஆண்டவன் பாரி என்ற வள்ளல். அவன் முந்நூறு ஊர் களைப் பெற்றிருந்தனன். அந்த முந்நூறு ஊர்களையும் பாரி தன்பால் வந்த இரவலர்க்கு இல்லை என்னாது அளித்தான். கொடுப்பதில் சிறந்தவன் பாரி. இல்லை என்னாது யார் எது கேட்பினும் அவன் கொடுப்பான். அதனால் அவன் புகழ்

தமிழகமெங்கும் பரவியது. குறுநில மன்னன் புகழ் தமிழ் தழைத்த பெருநிலப் பரப்பெங்கும் பேசப்பட்டது. முடியுடை மூவேந்தரும் அவன் எய்திய புகழ் கண்டு பொருமைப் பட்டனர். பொருமை முற்றிப் போராய் முடிந்தது. மூவேந்தரும் பறம்பு மலையைப் பல முறை முற்றுகையிட்டனர். பெருஞ் சேனைகளைத் திரட்டி வந்தும் மூவேந்தராலும் பறம்பு மலையைக் கைப்பற்ற இயலாததாயிற்று. அந்நிலையில் பாரியின் உயிர்த் தோழரான கபிலர், "தமிழக முடிமன்னர்களே, நீங்கள் மூவரும் உம் பெரும்படையும் எவ்வளவு காலம் முற்றுகையிட்டுப் போர் புரியினும் பறம்பு மலையை நீங்கள் கைப்பற்றலென்பது இயலாத செயலாகும். பாரியின் படை வீரத்தை நீவிர் அறியீர்; யான் அறிவேன். பறம்பு நாடு முந்நூறு ஊர்களைக் கொண்டது. அம் முந்நூறு ஊர்களையும் பரிசிலர் கொண்டனர். நீவிர் கூத்தரும் பாணருமாக ஆடிக் கொண்டும் வருவீராயின் யாம் உள்ளேம், பாரியுள்ளான்; குன்றும் உள்ளது. இம் மூன்றில் எவற்றைக் கேட்பினும் விருப்புடன் வழங்குவான்," என்று பாரியின் படைவீரமும் கொடை வீரமும் தோன்றக் கூறியுள்ள தகைமை படித்து இன்புறத்தக்கது.

நலங்கிள்ளி என்னும் சோழ மன்னன் தன் பகைவருடன் போர் தொடங்கும் முன்பு, "இப் பகைவர் என் அடியின் கீழ் ஒதுங்கி நின்று இரப்பார்களாயின் இந்த நாட்டை மட்டு மன்று, என் உயிரையும் மகிழ்ந்து அளிப்பேன். ஆனால் என் ஆற்றலை அறியாதும் மதியாதும், என்னுடன் இவர் போருக்கு எழுவாராயின், தூங்கும் புலியை இடறும் குருடன் போலப் பிழைத்து மீளுதல் அரிதேயாகும்," என்று வீரமொழி முழக்குகின்றான். இதன்கண் அம் மன்னனுடைய கொடை மடமும் படை மடமும் எவ்வளவு செவ்வையாகக் கூறப்பட்டுள்ளன. தலையாலங் கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

என்பான் போருக்குப் போகும் முன்பு, "என் பகைவர்களைப் போர்க்களத்தினின்றும் சிதறி ஓடும்படி செய்து அவர்களுடைய முரசத்தைக் கைப்பற்றி வருவேன். அவ்வாறு நான் செய்யாது ஒழிந்தால், என் குடி மக்கள் என்னைக் 'கொடுங்கோல் மன்னன்' என்று கூறியேசட்டும்; புலவர்கள் என் நாட்டைப் பாடாது நீங்கட்டும்; இல்லை என்று இரப்பவர்க்கு இல்லை என்று சொல்லும் இழிவு என்னை வந்தடையட்டும்," என்று வீர வஞ்சினங் கூறிச் செல்கின்றான். இவ் வஞ்சினக் கூற்றில் அவனுடைய வீரம் நன்கு விளங்குகிறதன்றோ? அரசர்கள் போரில் மடியாமல் நோய்வாய்ப்பட்டிறந்தால் அவர்களை வாளால் போழ்ந்து பின்னர் அடக்கம் செய்வர், எனின் போரில் பட்டிறத்தலையே தமிழ் மன்னர் சிறந்ததாக எண்ணினர் என்பது அறியலாகும். போரில் பெரும் புண்பட்டு வீழ்ந்து கிடப்பவர் அப்புண்ணைப் பெரிதாகக் கிழித்து விட்டு உயிர் விடுவர். இதனை, "மறக்காஞ்சி" என்பர்.

சேரன் செங்குட்டுவன், "வடநாட்டு மன்னர் முடித்தலையில் கண்ணகிக்குப் படிவம் சமைக்க எடுக்கும் கல்லினைச் சுமக்கச் செய்து கொண்டு வரேனேயாகில், யான் வீரக்கழலை அணிந்தும் போர்க் கோலங் கொண்டும் பகையரசர்களை நடுங்கச் செய்யாது கழிதலின், குடி மக்களை நடுங்கச் செய்யும் கொடுங்கோலன் ஆவன்," என்று வஞ்சினங் கூறுதலையும் காண்க.

பெருஞ்சேரலாதன் என்பவன் கரிகாற் சோழனோடு போர் புரிந்தான். அக் கடும்போர் வெண்ணிப்பறந்தலை என்னும் இடத்தில் நடந்தது. அப்போரில் சோழன் விட்ட அம்பு சேரலாதன் மார்பிற் பாய்ந்து முதுகின் வழியாக வெளி வந்தது. அம் முதுகுப் புண்ணும் புறப்புண்ணே என்று வெட்கி வடக்கிருந்து உயிர் விட்டான். முதுகில் புண் படுதல் வீரனுக்கு அழகன்று. மறப் பண்புடையார்

தன்மான உணர்ச்சி மிக்குடையவராவர். மான மழிந்து வாழ அன்னூர் ஒருபொழுதும் விரும்பார். சேரமான் கணைக்காலிரும் பொறை என்பான் கோச்செங்கணுனோடு பொருது சிறைப்பட்டபொழுது, நீர் வேட்கை உண்டாக, 'சிறிது நீர் தருக' எனச் சிறைக் காவற்காரனிடம் கூற, அவன் காலந்தாழ்த்துக் கொணர்ந்தாகை, மானங் கெடப் பெற்ற நீரைக் குடிப்பதினும் குடியாமல் உயிர் விடுதல் தக்கதென எண்ணி, நீரைப் பருகாமலே உயிர் விட்டான். இத்தகைய தன்மான உணர்ச்சியும் வீரத்தின்பாற் பட்டதே அன்றோ?

தமிழ்ப் புலவர்கள் தமிழ் மன்னர்களுக்கு வீரப் பெருக்கினையும் போருணர்ச்சியினையும் ஏற்ற காலத்தில் தக்கவாறு அறிவுறுத்தியுள்ளனர். அவர்கள் போர்களைத் தடுத்தும், முற்றுகைப்பட்ட காலத்தில் உள்ளிருந்தானை வெளிப்படுத்தியும், வெற்றி பெற்று வாகை சூடி வந்த காலத்தில் புகழ்ந்து வாழ்த்தியும் அவர்களுடைய வீரப் பெருமைகளை விளக்கியுள்ளனர்.

முன் ஒரு காலத்தில் தழும்பன் என்பான் ஒரு தலைவன் இருந்தான். அவனது இயற்பெயர் யாதென அறியக்கூட வில்லை. அவன் வீரம் மிக்கவன்; பல போர்களில் வெற்றி பெற்றவன். அவன் முகத்திலும் மார்பிலும் பகைவர்கள் வில், வாள், வேல் கொண்டு ஆக்கிய புண்களின் தழும்புகள்—வடுக்கள் — விழுப்புண்கள் — வீரப்பட்டங்கள் விளங்கின. பகைவனின் படைக்கலங்களால் உண்டான ஒவ்வொரு தழும்பிற்கும் அவன் வீர விளக்கமான கதை கூறிப் பெருமிதங் கொள்வான். அதனால் அவனை யாவரும் தழும்பன் என்றே அழைத்தனர் இயற்பெயர் மறைந்தே போயிற்று. அவனைப் பரணரும், நக்கீரரும் பாராட்டிப் பாடியுள்ளனர். "இரும்பாண் ஒக்கல் தலைவன் பெரும்புண் ஏர் தழும்பன்" என்றார். இதனினும் என்ன சிறப்பு

வேண்டும். புலி, வேங்கை, சிங்கன் என்றெல்லாம் தம் வீரம் விளங்கப் பெயர் அமைத்துக் கொள்ளலும் உண்டு. புலி கடிமால், வேங்கை மார்பன், கழற் சிங்கன் என்பன அவ்வாறு அமைந்த பெயர்களே.

வேளாண் மக்கள் விளையுட் காலத்தில் நெற்கதிரை அறுத்து வந்து களத்திற் குவிப்பின், பின்னர்ப் போர் அழித்து அதரிதிரித்துச் சுற்றத்தவர்களோடு உண்பதற்கு முன் கடவுள் பலி கொடுத்துப் பரிசிலர்க்கு வழங்குவர். அதே போல வெற்றி பெற்று வாகை மாலை சூடிய வேந்தன் நால்வகைச் சேனைகளையும் கொன்று குவித்து, எருது களிருக, வாள் மடலோச்சி ஆதரிதிரித்துப் பிணத்தின் குவியலை நிணச் சேற்ருேடு உதிரப் பேருலையில் ஏற்றி ஈனுவெண்மான் இடந்து உழந்து அட்ட கூழ்ப்பலியைப் பலி கொடுத்து, எஞ்சிய யானை, குதிரைகளையும் அங்குப் பெற்றனவற்றையும் பரிசிலர்க்கு வழங்குவர். வெற்றிக் களிப்பினுல் தேர்த்தட்டில் நின்று போர்த் தலைவரோடு குரவை யாடுவர்; தோல்வியுற்ற பகைவர் அரண்களை அழிப்பர்; நகரை அழித்து கழுதையைப் பூட்டி உழுது வரகு, கொள் முதலியவற்றை விதைப்பர். பகைவர் கிரீடத்தை அழித்து வீரக் கழலாகச் செய்து அணிவர். பகைவர் யானைகளின் நெற்றிப் பட்டங்களில் அமைந்த பொன்னைத் தாமரைப் பூக்களாகச் செய்து பாணர்க்குச் சூட்டுவர். பகைவர் பொருள்களைப் பரிசிலர்க்கு வழங்குவர். இவை யாவும் வீரத்தின் விளைவு அன்ருே?

வீரத்துடன் பொருது பட்டழிந்த போர் வீரனுக்கு நினைவுக்குறியாகக் கல் நடுதல் உண்டு. கல்லெடுத்து வந்து, நீர்ப்படை செய்து, அதில் அவனது உருவம், பெயர், புகழ் என்பன பொறித்து நாட்டுவர். பின்னர் உணவு படைத்து, மலரிட்டு அலங்கரித்து, பீலித் தொடையலும்

மாலையும் சாற்றிப் பல வாத்தியங்கள் ஒலிக்க விழா செய்து மகிழ்வர். அதனை நடுகல் என்பது வழக்கம். அக் கல்லிற்கு மதிலொடு கூடிய கோயில் கட்டுவர். இவையெல்லாம் வீர விழா அன்றோ?

# 6. தமிழகக் கோயில்கள்

'**கோ**யிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது நம் ஆன்றோர் அருண்மொழி. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது நம் முன்னோர் உரைத்த முது மொழி. ஆ-ஆன்மா (பசு); லயம்-ஒடுக்கம். ஆன்மா ஒடுங்குமிடம். எங்கும் நிறைந்தவர் கடவுள். அவருக்குத் தனி இடம் வேண்டுமா? வேண்டுவதில்லை தான். ஆனால் வியாபகமாய் உள்ள இறைவனை மனத்திற் பிணித்து நிறுத்த சாதாரண மக்கட்கு இயலுவதன்று. ஆதலினாலும் மக்கள் வாழ்க்கையின் பொருட்டு அல்லும் பகலும் உழைக்க வேண்டி யிருத்தலினாலும், அவர்கள் மனம் ஒருநிலைப்படுவ தில்லை. மனத்தை ஒருநிலைப் படுத்தி, மற்றவற்றை மறந்து, இறைவனை வழிபடுவதற்குத் தனித்தோரிடம் வேண்டி யுள்ளது. அத் தனியிடமே கோயில். முதலில் மக்கள் இயற்கைப் பொருள்களை வணங்கினார்கள். பின் அருவங் களைப் போற்றினர். அதன் பின்னர் உருவங்களை ஆக்கிக் கொண்டார்கள். முதலில் மர நிழலில் அமைத்தார்கள்; பிறகு பந்தல் அமைத்தார்கள்; அதன் பின்னர் ஓரறை இல்லமாயிற்று. அக் காலத்தில் மண், செங்கல், மரம் என்பவற்றால் ஓரறை இல்லக் கோயில்கள் ஆயின. அக் காலத்தில் உருண்டைக் கற்களே தெய்வச் சிலைகளாகத் திகழ்ந்தன.

பல்லவர் காலத்தில், கி. பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் தான் சிற்பக்கலை தமிழகத்தை அழகுபடுத்தத்

தொடங்கியது. ஐந்து – ஆறும் நூற்றுண்டில் தான் கருங் கல்லில் கோயில்களைச் சமைத்தார்கள். பாறைகளைக் குடைந்து மண்டபக் கோயில்கள் அமைத்தார்கள். தனிக் கற்கோயில்கள் எல்லாம் தேரைப் போன்று அமைந்தன. பாறைகளில் உருவங்களைச் செதுக்கினூர்கள். பின் செதுக்கப்பட்ட பாறைகளை ஒன்றின் மேல் ஒன்று அமைத் துக் கற்கோயில்களைக் கட்டினூர்கள். இதனைக் கட்டுக் கோயில் என்பர். மகேந்திர வர்மன் காலம் முதல் இத் தகைய கற்கோயில்கள் அமைந்தன. தனிக் கற்கோயில் ஓரறை கொண்டது. மண்டபக் கோயில் தூண்களையும் பல சிற்றறைகளையும் கொண்டது. கட்டுக்கோயில், ஒன்றன் முன் ஒன்ருகக் கட்டின பல மண்டபங்களையும் மதில்களையும் கொண்டது. இம் மண்டபங்கள் ஒற்றைப் படையில் அமைந்திருக்கும்.

பல்லவர்களுக்குப் பின் வந்த சோழர்களே பெருங் கோயில்களைக் கருங்கல்லாலும் செங்கல்லாலும் கட்டி ஞர்கள். சோழர்கள் மூலத்தானங்களை மிகப் பெரிதாகக் கட்டினூர்கள். சுற்று மண்டபங்களும் கோபுரங்களும் அளவால் சிறியன. கோயிலமைப்புக் கலை அவர்கள் காலத்தில் மிகவும் சிறப்பாகப் போற்றி வளர்க்கப்பட்டது. செப்புத் திருமேனிகள் செய்யப்பட்டன. தேவர் உருவங்கள் மட்டுமின்றி அடியார்களுக்கும் உருவங்கள் செய்து அமைக் கப்பட்டன. அடியார் உருவங்களையும் வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. இக் கோயில் கட்டடக் கலை பாண்டிய நாட் டிற்கும், ஈழ நாட்டிற்கும் சென்றது. தமிழர்தம் வாணிபத் தைப் பெருக்கும் பொருட்டுக் கடல் கடந்து, ஜாவா, சுமித்திரா, மலேயா, இந்தோசீனு முதலான நாடுகளுக்குச் சென்றபொழுது இக் கோயில் கட்டடக் கலையையும் கொண்டு சென்றனர். அங்கெல்லாம் குன்றம் அன்னக் கோயில்களை இன்றும் நாம் காணுமாறு கட்டியுள்ளனர்.

எனவே, தமிழர்களின் நாகரிகப் பண்பின் பழைமை பெருமைகளை எடுத்துக்காட்டி விளக்குவன கோயில்களே.

தமிழகத்திற்கு உள்ள தனிப் பெருமை அதன்கண் உள்ள கோயில்களே. சிறந்த ஆலயங்கள் பல தமிழ் நாட்டிலேதான் உள்ளன. அவற்றைக் கட்டியவர்களும் தமிழர்களே என்றால் சிற்பக்கலை எவ்வளவு சிறப்பாகப் போற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதை ஊகித்து அறியலாம் அன்றோ? சிற்பம், ஓவியம், இன்னிசை, நடனம் எனும் அருங்கலைகளின் வளர்ச்சிக்குக் களஞ்சியமாய் விளங்கியவை கோயில்களே. தென்னாட்டுக் கோயில்களிலுள்ள சிற்பச் செல்வம் வேறு எந்நாட்டுக் கோயில்களிலும் இல்லை என்றே கூறிவிடலாம். 'கல்லுஞ் சொல்லாதோ கவி' என்றார் கம்பர். தமிழகக் கோயில்களிலுள்ள ஒவ்வொரு சிற்பமும் கவி சொல்லுகிறதென்பதை அறிந்தே கூறினார் எனல் வேண்டும். மாமல்லை, காஞ்சி, பேரூர், மதுரை, வேலூர், நெல்லை, கிருட்டிணாபுரம் என்னும் ஊர்களிலுள்ள கோயில்களைக் காண்பவர் இதன் உண்மையை நன்கு அறிவர்.

ஆலயங்கள் அமைத்து இறைவனை வழிபடுதல் தமிழர்களிடை காணப்பட்ட பழைமையான செய்தியேயாகும். கோயில் வழிபாடு சங்க காலத்திலும் இருந்ததென்பது புறநானூறு, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் தமிழ் நூல்களால் அறியக் கிடக்கின்றது. அக்காலத்தில் கோயில்கள் சுடு மண்ணால் செய்யப்பட்டன. திருவடிவங்கள் சுதையால் செய்யப்பட்டு வர்ணங்கள் பூசப்பட்டன. ஓவியம் அக்காலத்தில் மிகச் சிறப்புற்று விளங்கியது. "வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய கண்கவர் ஓவியம்," என்று மணிமேகலை கூறுதல் காண்க. சிலப்பதிகாரத்தில் பல்வகைக் கோட்டங்கள் கூறப்படுகின்றன. கோயிலெடுத்து வழிபடுதல் அக்காலத்திலும்

இருந்த வழக்கமாகும் என்பது செங்குட்டுவன் பத்தினி தேவியாகிய கண்ணகிக்குக் கோயில் சமைத்து விழாக் கொண்டாடியதால் அறியலாம்.

இனித் தமிழகத்திலுள்ள சில கோயில்களைப் பற்றி இங்குக் காண்போம்:

பல்லவர் காலத்தில் மாமல்லபுரத்தில் 'பாண்டவ ரதங்கள்' எனப்படும் ஒற்றைக் கோயில்கள் அமைந்தன. மாமல்லபுரம் சிற்பங்களின் தாயகம் என்று கூறத் தகும். அங்கு வராக மண்டபம், மகிடாசுர மண்டபம், திரிமூர்த்தி மண்டபம் என்பன நரசிம்ம வர்மன் அமைத்த கோயில்கள் ஆகும். பாறைகளின்மீதுள்ள சிற்பங்கள், கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து நிற்றல் கங்கை வீழும் காட்சி, பகீரதன் தவம் முதலாகப் பல்வகைச் சிற்பங்கள் செறிந்து விளங்குகின்றன.

இராச சிம்மன் கட்டிய கச்சி கயிலாசநாதர் கோயில் சிற்பங்களுக்கு உறைவிடமாகும். சிவபெருமானின் பல வகை நடனத் தோற்றங்களை இங்குக் கண்டு களிக்கலாம். திரிசிராப்பள்ளி மலைக்குகைகளிலும் சிவனது தோற்றங் களில் சிலவற்றைக் காணலாம். தட்டினால் ஏழு வகை ஒலிகளை உண்டாக்கும் ஒலித்தூண் அமைப்புக் காணின் உவகை உண்டாகாது இராது. நாமக்கல், பேரூர் என்னும் இடங்களிலுள்ள சிற்பங்கள் காண்பவர் கண்களைக் கவரத் தக்கனவாகும். மகேந்திரவாடி, சாளுவன்குப்பம் என்னும் இடங்களிலுள்ள குடவரைக் கோயில்கள் கண்டு களிக்கத் தக்கன. மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலின் அமைப்பு முறை இக்காலத்திலும் காணத்தக்க காட்சியாயுள்ளது. திரிச்சிராப்பள்ளியில் கங்காதரர் சிற்பம் சிறந்த வேலைப்பாட்டு டன் மிளிர்கின்றது.

தஞ்சை இராச ராச சோழன் கட்டிய பெருவுடையார் கோயில் என்னும் இராச ராரேச்சரம், மாமல்லபுரத்துக் கடற்

கோயில் விமானத்தினை ஒத்தது. அக்கோயிலின் விமானம் தக்ஷிணமேரு ' எனப்படும். அக் கோவிலின்கண் உள்ள ஓவியங்கள் மிக்க இன்பமூட்டுவனவாகும். சுந்தரரும் சேரமான் பெருமாளும் கயிலை செல்லும் காட்சி மிகச் சிறந்த ஓவியமாக விளங்குகிறது. கங்கை கொண்ட சோழேச்சரமும், சிற்பங்கள் நிறைந்தனவே. இராசராசபுரம் என்னும் தராசுரத்திலுள்ள கோயில் சிற்பங்களுக்கு மிகவும் சிறப்புப் பெற்ற இடமாகும். இக்கோயில் இரண்டாம் இராசராசன் கட்டியதாகும். அறுபத்துமூன்று மூன்று நாயன்மார்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளில் சிறப்பானவற்றைச் சிற்பங்களாக இக்கோயிலில் பொறித்துள்ளது வேறு எந்தக் கோயிலிலும் காணாத காட்சியாகும். தாராசுரத்திலுள்ள இராசராசேச்சரத்தைச் சிறந்த சிற்பக் கூடம் என்றே கூறலாம். உருளைகளைக்கொண்ட தேர்போலச் செய்யப்பட்ட இக்கோயிலிலுள்ள முன்மண்டபம் அழகு மிக்க வேலைப்பாட்டுடன் விளங்குவதாகும், தராசுரக்கோயிலும் திரிபுவனக் கோயிலும் ஒன்றுபோன்ற அமைப்புடையன. தாராசுரக் கேரயில் தொள்ளாயிரம் ஆண்டுகட்குமுன் கட்டப்பட்டது. இரண்டாம் இராசராசனது உருவச்சிலையும் அவனுடைய அரசியின் உருவச்சிலையும் கோயிலின் கீழ்ச் சுவரில் காணலாம். கோயிலுக்குள் நுழைந்ததும் அரச கம்பீரன் திருமண்டபம் காட்சியளிக்கின்றது. அது நுட்பமான கலைத்திறம் வாய்ந்த மண்டபம். அக்கோயில் முழுதுமே வேலைப்பாடு நிரம்பியது. சுற்று மண்டபங்களின் அடிச்சுவர்களில் இராமாயணம், திருவிளையாடற் புராணம் என்பவற்றை விளக்கும் பல சித்திரங்களைக் காணலாம். இக்கோயிலில் காணப்படும் தூண் வகைகளுக்குக் கணக்கில்லை. எங்கும் உருவங்கள் நின்று அழகு செய்கின்றன.

பழையாறு என்று இன்று காணப்படும் சிற்றூர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு முதல் பதின்மூன்றும் நூற்

ருண்டுவரை சோழப் பேரரசர்களுக்குத் தலைநகரமாய் விளங்கியது. இவ்வூரில் அழகிய சிவன்கோயில் ஒன்று உண்டு. பழையாறைத் திருமேற்றளி என்பர். பழையாறை விண்ணகரம், சுந்தரப் பெருமாள் கோவில் என்பனவாகிய ஆலயங்கள் அமைந்து அழகு செய்கின்றன. பழையாறை வடதளி, மேற்றளி, திருச்சத்திமுற்றம், பட்டீச்சுரம் என்பன வற்றைத் தேவாரப் புலவர்கள் பாடியுள்ளனர். நந்திபுர விண்ணகரத்தைத் திருமங்கையாழ்வார் பாடியுள்ளார். பழையாறைக்குக் கங்கைகொண்டசோழன் இட்டபெயர் முடிகொண்ட சோழபுரம் என்பது.

சோழவள நாட்டில் சிற்பச் செல்வங்களைச் சுமந்து விளங்கும் கோயில்கள் பற்பல. திருவாரூர், வைதீசுவரன் கோயில், திருவிடைமருதூர் போன்ற ஊர்களிலுள்ள கோயில்கள் மிகப் பெரியன ; பெருமண்டபங்களைக் கொண் டன ; காணத்தக்கன. பாண்டிய நாட்டில் திருப்பரங்குன்றம், மதுரை, திருநெல்வேலி, கிருட்டிணபுரம் திருச்செந்தூர் முதலான இடங்களில் பெரிய கோயில்கள் உள்ளன. தென்னாற்காடு ஜில்லாவிலுள்ள 'சிதம்பரம்' காணத்தக்க கோயில்களுள் ஒன்று. வடஆற்காடு ஜில்லாவில் திருவண்ணாமலைக் கோயில் காணத்தக்கது. வேலூர் கோட்டைக்குள் இருக்கும் கோயில் அழகு வாய்ந்தது. அக் கோயிலுள் இருக்கும் மண்டபத்தின் அழகைக் கண்டு, அதனை அப்படியே பெயர்த்தெடுத்து இங்கிலாந்திற்குக் கொண்டு செல்ல முடியுமோ என்று ஓர் ஆங்கிலேயன் கருதினனும். வெங்கனூர்க் கோயிற் சிற்பமும் திருப்பெருந் துறை என்னும் ஆவுடையார் கோயிற் சிற்பங்களும் மிகச் சிறந்தனவாகும்.

தமிழகத்தில் மதுரை அன்றும் இன்றும் சிறப்புற்று விளங்கும் சிறந்த நகராகும். பாண்டிய மன்னர்க்கு அது தலைநகராய் விளங்கிய பெருமையை உடையது. தமிழ்ச்

சங்கம் அமைத்துத் தமிழாராய்ந்த இருந்த இடமும் அதுவே. அந்நகரின் நடுவில் விசும்பைத் தொடும் வியன் பெரும் கோபுரங்களைக் கொண்ட சோமசுந்தரர் ஆலயம் சிறப்புற்று விளங்குகிறது. 'மீனாட்சியம்மன் கோயில்' என்றே எல்லோரும் கூறிப் புகழுவர். அக்கோயில் மிகப் பெரியது. அந்நகரில் பன்னிரண்டு மாதங்களிலும் கோயி லில் திருவிழா நடந்துகொண்டே இருக்கும். அந்நகர் வைகை நதியின் தென்கரையில் அமைந்துள்ளதாகும். மிகப் பழைமையான நகரங்களில் தலை சிறந்தது மதுரை மாநகரே. மதுரைக் கோயில் 847 அடி நீளமும் 792 அடி அகலமும் உடையது. இக்கோயிலில் உயர்ந்த கோபுரங்கள் ஒன்பது காணப்படுகின்றன. வெளிக் கோபுரங்கள் நான் கும் உயர்ந்தோங்கி விளங்கி நான்கு திசைகளிலிருந்து கண் பார்க்கும் நீண்ட தூரம் காட்சியளிக்கின்றன. தூரத்தி லிருந்து காண்பார்க்கும் நான்கு கோபுரங்களும் ஒன்று போலவே காணப்படினும் அருகில் சென்று நுணுகிக் காண் பார்க்கும் ஒவ்வொன்றும் மிகச் சிறந்த வகையில் வேறு பட்டிருப்பன என்பது புலனாகும். கிழக்குக் கோபுரத்திற்கு இந்திர விமானம் என்று பெயர். அது திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேறி நன்மைகொண்டான் சுந்தரபாண்டி யனால் கட்டப்பட்டது. அக்கோபுரத்தின் அடிவாரத்தில் மதுரை வீரன் கோயில் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

மேற்குக் கோபுரத்திற்கு 'வருண விமானம்' என்று பெயர். அது ஒன்பது நிலைகளையுடையதாய் நூற்றைம்பதடி உயரம் உள்ளது. தெற்குக் கோபுரம் மற்றைய கோபுரங் களிலும் உயர்ந்தது; நூற்றைம்பத்திரண்டடி உயரமுள்ளது. வடக்குக் கோபுரம் மொட்டைக் கோபுரம் என்றழைக்கப் படும். அது முற்றுப் பெறாதது. வடக்குக் கோபுரத்தின் வழியாக உள்ளே சென்றால் ஐந்து சங்கீதத் தூண்களைக் காணலாம். அவை ஒவ்வொன்றும் ஒரே கல்லில் செதுக்

கப்பட்ட இருபத்திரண்டு தூண்களைக் கொண்டதாகும். அதனை அடுத்துப் பதினாறுகால் மண்டபமும், ஆயிரக்கால் மண்டபமும் உள்ளன.

கிழக்குக் கோபுரத்திற்குத் தென்புறத்தில் மீனாட்சியம்மன் சந்நிதிக்கு எதிரில் அமைந்த வாயிலின் வழியாக வந்தால் முதலில் அஷ்டசக்தி மண்டபமும் உள்ளது, அதன் கண் மாகேசுவரி, பிராமி, நாராயணி, ஐந்திரி, கௌமாரி, வாராஹி நாரசிம்மி, அபராஜிதா என்று கூறப்படும் எட்டுச் சக்திகளின் உருவங்களும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. அதனைக் கடந்து உட்சென்றால் மீனாட்சி நாய்க்கன் மண்டபத்தை அடையலாம். இவ்விரண்டு மண்டபங்களுக்கும் இடையிலுள்ள இடத்தில் வேடன் வேடிச்சிச் சிற்பங்கள் கண்களைக் கவர்கின்றன. அஷ்டசக்தி மண்டபத்தை அடுத்து முதலி மண்டபம் உள்ளது. அதற்கு இருள் மண்டபம் என்ற பெயருமுண்டு. முதலிமண்டபத்திலுள்ள ஆறு சிற்பங்களில் மோகினி, பிட்சாடணர், அனசூயா என்னும் சிற்பங்கள் மிகச் சிறந்தன. முதலி மண்டபத்தைக் கடந்து சென்றால் மீனாட்சியம்மன் கருவறையும் இடப்பக்கத்தில் பொற்றாமரைக் குளமும் உள்ளன. கிளிக்கூண்டு மண்டபம் முதலி மண்டபத்தை அடுத்துள்ளதாகும். அதன் கண் பாண்டவர் ஐவரின் சிலைகளும் வாலி சுக்ரீவர் சிலைகளும் உள்ளன. மீனாட்சியம்மன் கருவறையின் வெளியிலுள்ள மண்டபத்தில் திருமலைநாயக்கர் உருவமும் அவருடைய இரு மனைவியர் உருவங்களும் ஒரு தூணில் செதுக்கப்பட்டுள்ளன.

மீனாட்சியம்மன் கருவறையின் வடக்குப் பக்கலிலுள்ள வழியாகச் சோமசுந்தரர் ஆலயத்திற்குச் செல்லலாம். அந்த வாயிலின் எதிரில் முக்குறுணிப் பிள்ளையார் காட்சி அளிக்கிறார். சுந்தரேசர் ஆலயத்தின் சுற்று வழியில் வடமேற்கு மூலையில் தமிழ்ச் சங்க மண்டபம் உள்ளது

சுந்தரேசர் கருவறைக்கு முன் இருப்பது கம்பத்தடி மண்டபமும் எனப்படும். அங்குள்ள காளியின் உருவம், சிவனது ஊர்த்துவ தாண்டவம், மீனாட்சி கலியாணம். கால் மாறியாடிய நடராசமூர்த்தி முதலான பல அழகிய சிற்பங் களைக் கண்டுகளிக்கலாம்.

திருவானைக்காவல், கும்பகோணம், இராமேசுவரம் சீர்காழி முதலான இடங்களிலும் அழகிய பெரிய கோவில்கள் உள்ளன. அவற்றையெல்லாம் கண்டால் நம் முன்னோர் பெருமையும், அறிவுத்திறனும், கலை உணர்ச்சியும் நன்கு புலனாகும். முன்காலத்தில் நகராட்சி மன்றமும், கல்வி பயலும் கல்லாசாலைகளும், நாடக மேடைகளும் பிர சங்க மண்டபம் ஆவணக்களரியும் கோயிலிற்குள் அமைந்திருந்தன. பல்வேறு கலைகளுக்கும் இருப்பிடம் கோயில்களே. மற்றும், பகைவரால் ஊர்மக்களுக்கு ஆபத்து நேரிடுமானால் அவர்களைப் பத்திரமான இடத்திற் கொண்டு சேர்க்க வேண்டுமல்லவா? அதற்குப் பெரிய பெரிய மதில்களைக் கொண்ட பெருங்கோயில்களே தக்க பாதுகாவலான இடங்களாயிருந்தன. ஆதலால் அரசியலை ஒட்டியும், சமயத்தைச் சார்ந்தும், மக்கள் வாழ்வின் நலன் கருதியும் பெரிய பெரிய மதில்கள் சூழ்ந்த, பிரகாரங்கள் பல கொண்ட பெருங் கோயில்களைக் கட்டினர். உயர்ந்த கோபுரங்கள் பகைவர் மிக்க தூரத்தில் வரும்பொழுது கண்டறிதற்குப் பயன்பட்டன. மற்றும், சாதாரண காலத்தில் கோயிலிற்குச் செல்ல இயலாத மக்கள் கோபுரத்தைப் பார்த்துத் தொழுது நற்பேறு பெறலாம் அன்றோ!

# 7. தமிழகப் பெண்கள்

தமிழகம் மிகப் பழமையானது. தமிழர் மிகப் பழைமையானவர்கள். உலக நாகரிகத்திற்கே தமிழர் நாகரிகம் ஒரு தொட்டில் போன்றது. மனிதத் தோற்றத்திற்குத் தமிழகமே தாயகமாக விளங்கியது. தமிழ் நாட்டின் பெருமையை எடுத்துக் கூறக் கூற விரிந்துகொண்டே செல்லும்; ஆயினும், இக்காலத் தமிழகத்தின் நிலையை நோக்கும்பொழுது அவையெல்லாம் பழம் புராணமாய்ப் பரிகசிக்கும் தன்மையை எய்தும். ஆனால் பரிகசிக்கத்தக்கதுதானோ? இல்லை: இல்லை. இழந்த நலன்களை மீண்டும்பெற உணர்ச்சியூட்டும்.

தமிழகத்தில் பெண்கள் நிலை எவ்வாறு இருந்தது என்று அறிதல் வேண்டும். 'மனைக்கு விளக்கம் மடவார்' என்பது முன்னோர் கூற்று. இல்லறம் என்னும் தொடரில் இல் என்பது ஆகு பெயராய் இல்லுறை மடவாளையே குறிக்கின்றது. மற்றும், அறம் செய்தற்கு மனைவி இன்றியமையாதவள் என்பதை விளக்குகின்றது. இதனாலன்றோ 'விருந்து கண்டபோது என்னுறுமோ என விம்மும்' என்று சீதை அசோகவனத்தில் மனத்தின் கண்ணுற்ற துயரைக் கம்பர் எழுதிக் காட்டுகின்றார். அறிவு, ஆற்றல், செல்வநிலை என்பவை சேர்ந்தே ஒரு நாட்டின் உயர்வும் நாகரிகமும் துணிந்து கூறப்படுகின்றன. இம்மூன்றிற்கும் கடவுளராக கலைமகள், பராசக்தி, திருமகள் என்னும் மூவரைக் கொண்டுள்ளோம். நாட்டின் உயர்வுக்கு

ஆண்கள் காரணமாதல் போலவே பெண்களும் காரணமா கின்றனர் என்பது மேலோர் கொள்கை. இதனால் நாட்டிற்கு இன்றியமையாதனவாகிய மூன்றிற்கும் மூன்று பெண் தெய்வங்களையன்றோ வழிபடுகின்றோம்.

சங்க நூல்களை ஆராயுமிடத்தில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பெண்களும் அறிவு ஆற்றல் சிறந்த நிறைந்த புலமை பெற்றிருந்தனர் என்பது ஐம்பது பெண்பாற் புலவர்கள் இயற்றியுள்ள செய்யுட்களால் நன்குணரலாம். அவர்கள் ஆண்பாற் புலவர்களைப் போன்றே சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தனர். பெருங் காக்கைப் பாடினியார், சிறுகாக்கைப் பாடினியார் என்ற புலவர்கள் யாப்பிலக்கண நூல்களை இயற்றியுள்ளனர் என்பது யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகை உரை என்பவற்றால் அறிகிறோம். இலக்கியம் இயற்றுதலினும் இலக்கணம் இயற்றல் அரிதானதன்றோ! அவ்வையாரைப் பற்றிய செய்திகளை இந்நூலில் முதற் கட்டுரையால் நன்குணரலாம். சங்க காலத்தில் அவ்வை யாரின் நகைச் சுவையை அவள் நாஞ்சில் வள்ளுவனைப் பாடிய பாட்டால் அறியலாம். யானைப் பரிசு பெற்ற பாணன் கூற்றாக அமைந்தது அந்தப் பாட்டு. 'வீட்டில் அரிசி இல்லை. கொல்லையில் கொய்த கீரையைச் சுண்டினேன். மேலே தூவும் மாவிற்காகச் சிறிது அரசி கேட்டேன். அவன் மலையைப் போன்று ஒரு யானையைத் தந்தான். அவன் ஒன்றும் அறியாதவன்போலும்! இவ்வாறு அறியாது கொடை கொடுப்பாரும் உண்டோ? அவன் தன் நிலைக்குத் தக்கபடி தந்தான்' என்று பாடுகின்றார். குறமகள் குறியெயினி, குறமகள் இளவெயினி, வெண்ணிக் குயத்தியார் என்னும் பெண்பாற் பெயர்களைக் காணும்பொழுது அக்காலத்தில் கல்வியைப் பெற்றார் எக்குலத்திலும் இருந்தனர் என்பது இனிது விளங்கும்.

அரசகுலப் பெண்டிரும் நற்பெருங் கல்வி பெற்றுச் செய்யுட்கள் செய்துள்ளனர். பூதப் பாண்டியன் பெருந் தேவியார், ஆதி மந்தியார், பாரிமகளிர் என்பார் இயற்றிய செய்யுட்கள் எவ்வளவு இனிமையும் நயமும் வாய்ந்தன! பிற்காலத்தில் தோன்றிய அவ்வையார் குழந்தைச் செல்வமாக அரிய நீதி நூல்களைப் பாடித் தந்துள்ளார் அன்றோ? வீரத்தையும் கொடையையும் போற்றிப் பாடிய சங்ககாலப் பெண்பாற் புலவர்களும் உண்டு. பிற்காலத்தில் காரைக் காலம்மையார், ஆண்டாள் என்பார் பாடிய அருட் பாக்கள் எவ்வளவு சொற்சுவை பொருட்சுவை மிகுந்து இன்ப மூட்டுகின்றன. அதிவீர ராம பாண்டியரின் மனைவி கணவன் பாதியில் விடுத்த நைடத நூலைப் பூர்த்தி செய்தனர் என்பர். குண்டலகேசி மதவாதம் செய்தவள் அன்றோ? நீலகேசி, விசயை, வாசவதத்தை, மானனீகை என்பார் சிறந்த கல்வியறிவுடையவர்களாகவே நீலகேசியிலும், சீவகசிந்தாமணியிலும், பெருங் கதையிலும் கூறப்படுகிறார்கள். பெண்கள் இசைப் பயிற்சியிலும், வல்லவர்களாயிருந்தனர் என்பது சங்க நூற்களாலும் பழங்காப்பியங்களாலும் அறியலாம். பாணபத்திரன் மனைவி இசையில் வென்றதும், மாதவி நடனமாடியதும் யாழ் வாசித்ததும் அவர்களுடைய இசைப் பயிற்சியை விளக்குவனவாகும். இசைக்கு மாதங்கி என்னும் பெண் தெய்வமே கூறப்பட்டுள்ளது. மருத்துவம், சோதிடம், சிற்பம். சித்திரம் என்பவற்றினும் அவர்கள் வல்லவர்களாயிருந்தனர் என்பது தமிழ் நூல்களால் அறியதக்கது.

பொறுமைக் குணத்திற்குப் பெண்களைப் போன்றார் யாருளர்? கணவனாலும், சுற்றத்தாராலும், குழந்தைகளாலும் உள்ளத்திற்கும் உடலுக்கும் நேரும் துன்பங்களை எவ்வளவு பொறுத்துக் கொள்கின்றனர்! தமக்கென்று ஒன்றும் கருதாமல் கணவனுக்கும் குழந்தைகளுக்குமென்று

வருந்திப் பொறுமையோடு உழைக்கும் சிறந்த பரோபகார நிலையை எய்தப்பெற்றவர் பெண்களே. பெண்கள் வீரத்தில் குறைந்தவர்கள் என்று எண்ணிவிடக் கூடாது. அவர்கள் வீரம் போற்றத்தக்கது என்று புறநானூற்றுப் பாடல்களால் நன்குணரலாம். கண்ணகியின் பொறுமை புகார்க் காண்டத்தில் காணக்கிடக்கின்றதன்றோ! கணவன் கொலையுண்டான் என்பதைக் கேட்ட கண்ணகி அஞ்சிக் கோழை மனம் படைத்திடாது வீரயெழுச்சி கொண்டு சென்று பாண்டியனோடு சொற் போராடி அவன் ஆவி போக்கி மதுரையையும் தன் கற்பு வலிமையால் தீக்கிரையாக்கினள் அன்றோ?

சிக்கன வாழ்க்கையை நடத்துபவர்கள் பெண்களே. மகளிர் விளையாட்டுக்களும் பலவே. பந்தாடல், சாழல், தெள்ளேணம், தோணோக்கம், கோலாட்டம், கும்மியடித்தல், உந்தி என்பன மகளிர் விளையாட்டே.

கணவனைத் தம் உயிரெனக் கருதுபவர் பெண்கள். கணவனைப் பேணுதலும்; கற்பினைக் காத்தலும், மக்களைச் சிறப்புற வளர்த்தலும், விருந்தினரைப் பேணுதலும் தம் கடமைகளாகக் கொண்டனர் மகளிர். கணவனையிழந்தால் தாமும் உயிர்விடத் துணிவர்; அல்லையேல் யாவற்றையும் துறப்பர். கணவனை இன்னடிசிலூட்டி உண்பித்து மகிழ்வர் பெண்கள். வன்மை மிக்க ஆடவரையும் மேன்மை மிக்க பெண்டிர் பிணித்து விடுவர். அஃதவர்கள் கொண்டிருக்கும் உண்மை அன்பினால் தான் என்பது உணரத்தக்கது.

*" மென்மை மகளிர்க்கு வணங்கி வன்மையின்*
*ஆடவர்ப் பிணிக்கும் பீடுகெழு நெடுந்தகை "*

என்னும் புறநானூற்றடிகள் இனிது விளக்கும்.

மகளிரை ஆடவர் அடிமைப் படுத்துகின்றனர் என்று உலகம் ஏசுகின்றது. ஆனால் உண்மையோ அதற்கு முற்றி

லும் மாறுனது, ஆடவரைப் பெண்டிர் அடிமைப்படுத்தி ஆட்டி வைக்கின்றனர் என்பதை,

" கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல
மேவன செய்யும் ..........."...

என்னும் அடிகள் இனிது விளக்குகின்றன. மனை மகளிர்க்கு ஆடவர் உயிர். ஆடவர்க்கு உயிர் வினை செயல். இதனை மகளிர் நன்குணர்ந்திருந்தனர். தம் மக்கள் சான்றோர் எனக் கேட்டதாய் ஈன்ற பொழுதிலும் பெரிது வக்கின்றுள். தன் மகன் சான்றோர் பழிக்கும் வினை செய் தான் எனின் அவனை ஈன்ற வயிற்றைக் கிழித்துக்கொண்டு இறக்கத் துணிவாள் தாய் என்பதைத் தகடூர் யாத்திரைச் செய்யுள் இனிது விளக்குகின்றது. "எம்மில் செய்யா அரும் பழி செய்த, கல்லாக் காளை நின்னீன்றனனே," என்னும் அடிகள் எவ்வளவு நொந்து கூறும் மொழிகள்! எண்ணிப் பாருங்கள். 'கல்லாக்காளை' என்றது அக்காலத்திற்கு ஏற்ப வெற்றி வீரங் கல்லாத காளை என்றும் இக் காலத்திற்குத் தக்க கல்வியைக் கல்லாத காளை என்றும் பொருள் கொள்ளலும் பொருந்து மல்லவோ ? இத்தகைய உணர்ச்சி தாய் உளளத்தில் இருப்பதை மகன் அறிவானுயின், மகன் எவ்வாறு திருந்தி ஒழுகுவான் என்பதும் உணரத்தக்கதே.

'விருந்தோம்புதல்' பெண்களுக்குரிய கடமையாகும். இன்முகங் காட்டி, இன் சொற்கூறி, இன்னடிசில் கொண்டு விருந்தினரை உண்பித்தல் இல்லறத்தொழும் மகளிரின் முதற் கடமையாகும். தம் வீட்டில் ஆண்பாலர் இல்லாக் காலத்தில் விருந்தினர் வந்தால் குழந்தைகளைக் கொண்டு முறைப்பெயரிட்டு அழைப்பித்து உபசரித்து அனுப்புதல் அவர்கள் வழக்கம். கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் கண்ணகி பொன், பொருள் போனதற்கு வருந்தவில்லை ;

விருந்தெதிர் கொள்ளுதலை இழந்ததற்காக வருந்துகிருள். விருந்தோம்பல் தலைவன் தலைவியர்க்கிடையே உண்டாகும் ஊடலையும் தீர்த்து வைக்கும் வாயிலாக வுள்ளது.

பெண்கள் கலையறிவு பெற்றவர்கள். ஓவியம் தீட்டல் காவியம் புனைதல், ஆடல், பாடல், குடிசைத் கைக் தொழில் களைப் புரிதலாகிய பலதுறைகளிலும் பெண்டிர் சிறந்திருந் தனர். நூல்நூற்றல், ஓலை வேலை, முதலியன அவர் செய்து வந்தவையே. 'பருத்திப் பெண்டிர்' என்னும் தொடரும்,

" தாலப் புல்லின் வால் வெண் தோட்டுக்
கைவல் மகடூஉ, கவின் பெறப் புனைந்த
செய்வினை தவிசு "

என்னும் அடிகளும் நன்கு விளக்கும்.

பண்டை மகளிர் ஆற்றோரங்களிலும், குளக்கரை களிலும் பூஞ்சோலைகளிலும் தம் மக்களோடு ஆடிப்பாடி மகிழ்வர். பாவை விளையாட்டு. அலவன் ஆட்டு, மணல் வீடுகட்டல், சிப்பி விளையாடல், ஆயவற்றில் பெண்கள் இன்பப் பொழுது போக்குவர்; குரவைக் கூத்தாடுவர்.

பெண்டிர் இறை வழிபாட்டிலும் குறைந்தவர் அன்று. அவர்கள் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டனர். வீட்டில் மகளிர் மாலையில் மல்லிகை மலரும் நேரம் அறிந்து எளி தரும் விளக்கேற்றி நெல்லும் மலரும் தூவி இல்லுறை தெய்வத்தை வழிபட்டனர். கொண்ட கணவனுக்கு வரு வாய்குன்றியக் காலத்தில் தந்தை வீட்டின் கொழுஞ் சோற்றுணவை விரும்பாது, ஒரு வேளை உணவை உண்டு மகிழ்ந்திருப்பவளும் பெண்ணே, மணிமேகலையின் வாழ்க்கை வரலாறு மகளிரும் துறவிற்கும் தொண்டிற்கும் தக்கவர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது அன்றோ!

மகளிர் தம் குழந்தைகளுக்கு முதல் ஆசிரியர் ஆவர். கணவனுக்கு யோசனை கூறுங்கால் விறல் மந்திரியாகின்ருள்.

கற்புடையப் பெண்களைத் தெய்வமாகப் போற்றும் வழக்கம் தமிழகத்தில் பண்டைநாள் முதல் உண்டு. கண்ணகிக்கும் அவ்வையாருக்கும் தமிழகத்தில் கோயில்கள் உண்டு. 'மங்கையர்க்குத் தனியரசு எங்கள் தெய்வம்' என்று சேக்கிழார் மங்கையர்க்கரசியாரைப் போற்றிப் பாடுகின்றார். கற்புடைப் பெண்கள் இறந்தால் இறந்தவிடத்துக் கல்நட்டுப் பூசிப்பது உண்டு. அதனை மாஸதிக்கல் என்பர் மங்கலத்தோடு இறந்த பெண்களைத் தெய்வமாகக் கொண்டாடல் குடும்பங்களில் உண்டு. பாவாடைக்காரியை வரவழைத்தல், சுமங்கிலிப் பிரார்த்தனை என்பவெல்லாம் அந்த வகையைச் சார்ந்தனவே. "ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்கியம்," என்னும் பழமொழியால் பெண்களைச் செல்வத் திருமகளாகவே நம் நாட்டவர் கருதிப் பேணுகின்றனர் என்பது அறியக் கிடக்கின்றதன்றோ? திருமணக் காலத்தில் மணமகனைத் திருமாலாகவும் மணமகளை இலக்குமியாகவும் எண்ணித் தாரை வார்த்துக் கொடுத்தல் இங்கு உணரத்தக்கது.

# கட்டுரைப் பயிற்சி வினக்கள்

## I அவ்வை தந்த குழந்தைச் செல்வம்

1. தமிழ் நாட்டில் மூன்று அவ்வையார்கள் இருந்தனர் என்பதையும் அவர்கள் காலத்தையும் பற்றி எழுது,

2. முதல் அவ்வையாரும் அதிகமானும், அவ்வையாரும் தொண்டைமானும் என்று தலைப்பு அமைத்து இரு கட்டுரைகள் எழுது.

3. இரண்டாம் அவ்வையார் காத்தவர் யாவர்? அவர் இயற்றிய நூல்கள் யாவை?

4. மூன்றும் அவ்வையாரைப் பற்றிய கதைகளில் ஏதேனும் ஒன்றை விளக்கி எழுது.

5. மூன்றும் அவ்வையார் குழந்தைகளுக்கெனவே வாழ்ந்தாள் என்பதை விளக்கு.

6. அவ்வையார் கோயில் எங்குள்ளது? அதனைப்பற்றி அறிவன யாவை?

## II பழமையும் புதுமையும்

1. தமிழில் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே சிறந்த நூல்கள் இருந்தன என்பதை விளக்கு.

2. முடிநாகராயர் பாட்டால் அறிவன யாவை?

3. தமிழ் மொழியின் இருண்ட காலம், பொற்காலத் தொடக்கம், பொற்காலம் என்பவற்றுள் இரு காலங்களில் தெளிவாக எழுது.

4. 'தமிழ் மொழி வளர்ச்சி-பத்து முதல் பதினான்காம் நூற்றாண்டு வரை' என்ற தலைப்பமைத்து ஒரு கட்டுரை எழுது.

5. தமிழ் மொழி வளர்ச்சி—16 முதல் 19-ஆம் நூற்றாண்டு வரை—என்ற தலைப்பமைத்து ஒரு கட்டுரை வரைக.

6. 'தமிழ் மொழியும் இருபதாம் நூற்றாண்டும்' என்பதைத் தலைப்பாக அமைத்துக் கட்டுரை ஒன்றினைத் தெளிவாக எழுது.

## III பிறமதத்தார் தமிழ்த் தொண்டு

1. பௌத்தரும் சமணரும் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினை விளக்கி எழுது.

2. இஸ்லாமியர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டினை விளக்கு.

3. சைவ வைணவ மதத்தினரும் தமிழ் மொழியைப் பேணிய முறையை விளக்கு.

4. கிறித்தவ மதத்தவர் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டுகளை விளக்கு.

5. குறிப்பு எழுது:—கால்டுவெல், போப், வீரமாமுனிவர், கிருஷ்ணபிள்ளை, வேதநாயகம்பிள்ளை, வேதநாயக சாஸ்திரியார்.

## IV போற்றத்தகும் கிழவிகள்

1. பதினான்காம் நூற்றாண்டு முதல் பதினாறும் நூற்றாண்டு இறுதியாகத் தமிழகத்தின் நிலையை விளக்கி எழுது.

2, காமாட்சியம்மாளின் குண நலங்களை விளக்கி எழுது.

3. காமாட்சியம்மாள் ஏன் 'ஊரைக்காத்த உத்தமி' என்று போற்றப்பட்டாள் என்பதை விளக்கி எழுது.

4. உள்ளிக்கடையில் கிழவி திருடர்களை எவ்வாறு ஏமாற்றினாள் ?

5. திருடர்கள் பனை ஓலைகளை வண்டியில் ஏற்றியபொழுது புலவரின் தாயான கிழவி மனத்தில் எண்ணியவை யாவை ? அவள் எந்த உறுதியான முடிவிற்கு வந்நாள் ? ஏன் ?

6. 'ஏடுகாத்த கிழவி' என்ற பெயர் அவளுக்குப் பொருந்துவது எப்படி ? விளக்கு.

7. இம் மூன்று கிழவிகளின் தந்திரங்களை ஆராய்ந்து அதனால் பண்டைத் தமிழ்ப் பெண்மணிகளைப்பற்றி அறிவதை விளக்கி எழுது.

8. பண்டைக் காலத்தில் கல்வி, இக் காலத்தில் கல்வி என்ற இரு நிலைகளைப் பற்றியும் நீ அறிவன யாவை ?

## V தமிழர் வீரம்

1. வீரம் என்பதை எவ்வாறு கூறுவர் ? எவ்வெக் காரணங்களால் வீரம் தோன்றும் ?

2. தமிழ் மறவர் பண்புகளை விளக்கி எழுது.

3. தமிழ்ப் பெண்களும் வீரமுடையவர்களாய் விளங்கினர் என்பதைத் தெளிவாக விளக்கு.

4. தமிழ் வேந்தரின் மறப்பண்பு என்ற தலைப்பமைத்துக் கட்டுரை எழுது.

5. 'மன்னர் கூறும் வஞ்சினம்' என்பதை உதாரணங்களுடன் விளக்கு.

6. தமிழ் மறவரும் மன்னரும் மானமே உயிர் என வாழ்ந்தனர் என்பதை விளக்கு.

7. தழும்பனைப் பற்றி அறிவன யாவை ?

8. போர்க்கள வேள்வி அல்லது வெற்றி பெற்றாரின் வீரச் செயல்களை விளக்கு.

9. நடுகல் பற்றி அறிவதென்ன ?

10. 'புலவர் வீரம்' என்ற தலைப்பமைத்து ஒரு கட்டுரை எழுது.

## VI தமிழகக் கோயில்கள்

1. தமிழகத்தில் பண்டைக் காலத்தில் கோவில்கள் அமைந்த நிலையை விளக்கு.

2. கோவில்கள் கல்லால் கட்டத் தொடங்கிய பொழுது எவ்வெவ்வாறான வகையில் தொடங்கி வளர்ச்சியுற்றன என்பதை விளக்கி எழுது.

3. கோயில் கட்டடக் கலை கடல் கடந்தும் சென்ற வகையை விளக்கி எழுது.

4. கோயில் வழிபாடு சங்க காலத்திலும் உண்டு என்பதை ...ங்கு.

5. பல்லவர்களும் கோயில் கட்டடங்களும் என்பதை விளக்கித் தெளிவான கட்டுரை எழுது.

6. பிற்காலச் சோழர்கள் கட்டிய கோயில்களைப் பற்றி அறிந்தவற்றை எழுது.

7. குறிப்பு எழுது :—

காஞ்சிபுரம், பழையாறு, மதுரை,—என்னும் நகர்களின் சிறப்பியல்புகளை அங்கங்குள்ள கோயில்களைக் கொண்டு விளக்கிக் காட்டு.

8. தமிழகத்தில் கருங்கற்களினால் பெருங் கோயில்கள் கட்டியதால் அறியப்படும் முன்னோர்களின் நோக்கங்களை விளக்கி எழுது.

## VI தமிழகப் பெண்கள்

1. தமிழகத்தின் பழமைகளை அறிவதனால் ஏற்படும் நலன்களை விளக்கு.

2. பெண்களைத் தமிழகம் சிறப்பாகவே போற்றி வருகின்றது என்பதைச் சான்றுகள் தந்து விளக்குக.

3. 'பண்டைக் காலத்தில் பெண் கல்வி' என்ற தலைப்பமைத்துச் சான்றுகளுடன் ஒரு கட்டுரை எழுது.

4. 'பண்டைக் காலப் பெண்பாற் புலவர்' என்ற தலைப்பு அமைத்து இருவரைப் பற்றி எழுது.

5. 'காப்பியங்களில் பெண்கள் நிலை' பற்றி அறிவது என்ன?

6. பெண்களின் பொறுமை, கற்பு, வீரம், புலமை என்பவற்றை விளக்கி ஒரு கட்டுரை எழுது.

7. பெண்களுக்கு அடங்கியே ஆடவர் வாழ்ந்தனர் என்பதை விளக்கு.

8. பெண்களிடம் காணப்பட்ட விருந்தோம்பல், கணவனைப் பேணல், தன்னலம் மறுத்தல், கைத்தொழில், இல்மாட்சி என்பவற்றை விளக்கு.

9. குறிப்பு எழுது :—

பருத்திப் பெண்டிர், கல்லாக்காளே, மணிமேகலே, மாஸதிக் கல்.

## VII பொதுக் கட்டுரை வினுக்கள்

1. 'முதலாம் அவ்வை மூன்றும் அவ்வை என்பார் தமிழ்க்குச் செய்த தொண்டு' என்பது பற்றி எழுது.

2. தமிழ் மொழி வரலாறு: சங்ககாலம், இருண்டகாலம், பொழுது புலர் காலம், பொற்காலத் தொடக்கம், பொற்காலம், பிற்காலம்—என்ற பாகு பாட்டுடன் விளக்கு.

3. கிறித்தவர், சமணர், பௌத்தர் செய்த தமிழ்த் தொண்டு.

4. பெண்கள் ஆபத்துக் காலத்திலும் மனங் கலங்காத உறுதியும் சமயோசித புத்தியும் உடையவர்கள் என்பதை விளக்கிக் காட்டு.

5. தமிழர் மறவர் வீரம்; தமிழ் மன்னர் வீரமும் வெற் றியும் தமிழக மறக்குடி மகளிர்; என்ற தலைப்புக்களை அமைத்துத் தனித் தனிக் கட்டுரைகள் எழுது.

6. "பண்டைத் தமிழகமும் தெய்வ வழிபாடும்"

கற்கோயில்கள் ;

பல்லவர்களும் சோழர்களும், கட்டடக் கலையை வளர்த்த முறை,

கோயில்களும் பழந்தமிழ் நாடும், என்னும் தலைப்பு அமைத்துக் கட்டுரைகள் எழுது.

7. தமிழகத்தில் பெண்களுக்குரிய மதிப்பு; தமிழகப் பெண்களின் புலமை; தமிழகப் பெண்களின் வீரம்; தமிழகப் பெண்களின் இல்லற மாட்சி; என்பவற்றைத் தலைப்பாகக்கொண்டு தனித்தனிக் கட்டுரை எழுதுக.

CONNEMARA PUBLIC LIBRARY
5 - MAY 1957